# நபி வழி

**உண்மை இஸ்லாத்தின் கொள்கை விளக்க இதழ்**

பிப்ரவரி 2008 விலை ரு. 7/-

# இறைவழியில் செலவு செய்தல்

## திருக்குர்ஆனிலிருந்து...

''தங்கள் செல்வத்தை இறைவழியில் செலவிடுகின்றவர்களுக்கு, ஒரு தானியம் உதாரணமாகும். அத்தானியம் கதிர்களை முளைப்பிக்கும். ஒவ்வொரு கதிரிலும், நூறு தானியங்கள் இருக்கும். தான் நாடியவருக்கு அல்லாஹ் அதிக (மதிக) மாகக் கொடுக்கின்றான். அல்லாஹ் தாராளமாகக் கொடுப்பவனும், மிக்க அறிபவனுமாவான்.

தங்கள் செல்வத்தை இறைவழியில் செலவிட்டுப் பின்னர் எவ்வகையிலும் உபகாரத்தை நினைவூட்டாமலும், எவ்விதத்திலும் துன்பத்தைக் கொடுக்காமலும் இருப்போருக்கு அவர்களின் கூலி அவர்களின் இறைவனிடம் உண்டு. அவர்களுக்கு எவ்வித அச்சமும் ஏற்படாது. அவர்கள் கவலையடையவுமாட்டார்கள்''. (திருக்குர்ஆன் 2 : 262, 263)

## நபிமொழியிலிருந்து....

ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் மகள் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு அறிவுரை கூறினார்கள்:

''நீ அல்லாஹ்வின் வழியில் எண்ணி எண்ணி செலவு செய்யாதே. அவ்வாறு செய்தால் அல்லாஹ்வும் உனக்கு எண்ணி எண்ணியே வழங்குவான். உனது பணப்பையின் வாயை (கருமித்தனத்தினால்) மூடிவிடாதே. அவ்வாறு செய்தால் அதன் வாய் மூடியே வைக்கப்படும். முடிந்த அளவுக்கு மனம் திறந்து செலவு செய்''. (ஆதாரம் : புகாரி)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

''தினசரி காலையில் இரண்டு வானவர்கள் இறங்குகின்றனர். அவர்களில் ஒருவர், அல்லாஹ்வே! (உன் வழியில்) செலவு செய்பவர்களுக்கு சிறந்த பிரதிபலனை வழங்குவாயாக. மேலும் அவருடைய அடிச் சுவட்டில் நடக்கின்றவர்களை உருவாக்குவாயாக என்று கூறுகிறார். இன்னொருவர், அல்லாஹ்வே! செல்வத்தை (உன் வழியில் செலவு செய்யாமல்) தடுத்து வைத்துக் கொள்பவருக்கு அழிவையும், நாசத்தையும் ஏற்படுத்துவாயாக என்று கூறுகிறார்''. (ஆதாரம் : புகாரி)

## ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்கள்...

''சமுதாயம், இந்த ஜமாஅத்திற்காக எல்லா வகையிலும் தொண்டு செய்ய வேண்டும். செல்வத்தின் மூலம் தொண்டு செய்வதிலும் குறைபாடு இருக்கக் கூடாது. பாருங்கள். உலகத்தில் எந்த இயக்கமும் சந்தா இல்லாமல் செயல்பட முடியாது. ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்), ஹஸ்ரத் மூஸா (அலை), ஹஸ்ரத் ஈசா (அலை) ஆகிய எல்லா இறைதூதர்களின் காலத்திலும் சந்தா சேகரிக்கப்பட்டு வந்தது. எனவே நமது ஜமாஅத்தின் மக்களும் இந்த விஷயத்தை கவனத்திற் கொள்வது அவசியமானதாகும்''. (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 358)

''நீங்கள் இரண்டு பொருளை நேசிக்க முடியாது என்பது வெளிப்படை. எனவே நீங்கள் செல்வத்தையும் நேசித்து, இறைவனிடமும் நேசம் கொள்ள முடியாது. ஒன்றைத்தான் நேசிக்க முடியும். எனவே இறைவனை நேசிப்பவர் நற்பேறு பெற்றவராவார். உங்களில் ஒருவர் இறைவனை நேசித்து, அவன் வழியில் செல்வத்தை செலவு செய்வாரென்றால், அவருடைய

தொடர்ச்சி 5ஆம் பக்கம்

# மத நல்லிணக்கம்

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன் மாதிரி

கைபர் வெற்றியின் போது தவ்ராத்தின் சில பிரதிகள் முஸ்லிம்களுக்கு கிடைத்தன. யூதர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து எங்களுடைய புனித வேத நூலை எங்களிடம் கொடுத்து விடுங்கள் என்று கேட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம் யூதர்களின் வேத நூலை அவர்களிடம் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்றார்கள்.

யூதர்களின் தவறான போக்கின் காரணமாக அவர்களுக்கு தண்டனை கிடைத்துக் கொண்டிருந்தது என்றாலும் எதிரிகளிடம் கூட அவர்களின் மார்க்க உணர்வுகளை புண் படுத்தும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது என்ற கொள்கையுடையவர்களாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விளங்கினார்கள்.

மதீனாவில் ஓர் உடன்படிக்கை நடந்தது. அதன்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல நிபந்தனைகளை வகுத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த சூழ்நிலையில் எவ்வாறு மத நல்லிணக்கத்தை நிலைநாட்டினார்கள்; அந்த சமூகத்தில் அமைதியை நிலைநாட்ட முயற்சி செய்தார்கள் என்பது தெரிகின்றது. சமூகத்தில் அமைதி நிலை பெற வேண்டும் என்பதற்காக அவர்கள் அவ்வாறு செய்தார்கள்.

மதீனா சென்ற பின்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யூதர்களுடன் செய்த உடன்படிக்கையில் சில நிபந்தனைகள் இவையாகும்:

1. முஸ்லிம்களும், யூதர்களும் ஒருவருக்கொருவர் அனுதாபத்துடனும், கபடமற்ற நிலையிலும் இருப்பார்கள். ஒருவர் மற்றவருக்கெதிராக அநீதியோ வரம்பு மீறுதலோ செய்ய மாட்டார்கள்.

யூதர்கள் இந்த உடன்படிக்கையை முறித்துக் கொண்டேயிருந்தனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நன்மையையே செய்து வந்தார்கள். யூதர்கள் வரம்பு மீறிவிட்ட பிறகு அவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

2. ஒவ்வொருவருக்கும் மார்க்க சுதந்திரம் உண்டு என்பதாகும். முஸ்லிம்கள் மதீனாவில் பெரும்பான்மையாகயிருந்தாலும் (யூதர்களாகிய) நீங்கள் உங்கள் மார்க்கத்தில் சுதந்திரமானவர்களாக இருக்கின்றீர்கள்.

3. குடிமக்கள் அனைவரின் உயிர்களும் உடைமைகளும் பாதுகாப்பாக இருக்கும். ஒருவர் குற்றம் செய்தால் அல்லது அநியாயம் செய்தாலேயன்றி அவரை மதித்து நடக்க வேண்டும்.

இதுவும் இருவருக்கும் பொதுவான சட்டமாகும். குற்றம் செய்பவர் முஸ்லிமாகயிருந்தாலும் அல்லது யூதராகயிருந்தாலும் அவருக்கு கண்டிப்பாக தண்டனை கிடைக்கும். மற்றவர்களை பாதுகாப்பது அனைவரின் ஒட்டு மொத்தமான கடமையாகும். ஆட்சியின் கடமையாகும்.

4. எல்லா விவகாரங்களும் சண்டைகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எடுத்து வைக்கப்படும். மேலும் எல்லாத் தீர்ப்பும் இறை கட்டளைக்கு ஏற்ப இருக்கும்.

இறை கட்டளைக்கேற்ப என்பதன் பொருள், ஒவ்வொரு நபரும் எந்த மார்க்கத்தை சேர்ந்தவராயிருக்கின்றாரோ அதற்கேற்ப அவருக்கு தீர்ப்பு வழங்கப்படும். தீர்ப்பு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள்தான் கொடுப்

பார்கள். ஏனென்றால் அப்போது உயர் அதிகாரி அவர்கள்தான். தீர்ப்பு வழங்குவது அன்னாரின் அதிகாரத்தின் கீழ் இருக்கின்றது. ஆனால் மக்கள் எந்த மார்க்கத்தின் மீது நம்பிக்கை வைத்திருந் தார்களோ அதன் படியே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். சில யூதர்களுக்கு அவர்கள் ஏற்றுக் கொண்ட தவ்ராத்தின் அடிப்படை யிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். அதனை இன்றைய கிறித்தவர்கள் ஆட்சேபனை செய்கின்றனர். அநியாயம் செய்யப்பட்டு விட்டது என்று குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் அந்த யூதர்கள் கூறியபடியே அவர்களின் மார்க்க சட்டத்திற்கேற்ப தீர்ப்புகள் வழங்கப்பட்டன.

5. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அனுமதியின்றி எவரும் போருக்காக வெளியேற வேண்டாம் என்பது ஒரு நிபந்தனையாக இருந்தது. ஏனென்றால் ஒரு ஆட்சியின் கீழ் வாழும்போது அதற்கு கட்டுப் பட்டிருப்பது அவசியமானதாகும். இந்த நிபந்தனை இன்றைய காலத்தில் ஜிஹாது வாதிகளுக்கும் ஒரு வழிகாட்டலாக இருக் கின்றது. எந்த ஆட்சியின் கீழ் இருக்கின் றோமோ அதனுடைய அனுமதியில்லாமல் அதனுடைய இராணுவத்தில் சேர்ந்தாலே யொழிய எந்தவிதமான ஜிஹாது செய்யவும் அனுமதியில்லை.

6. யூதர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக ஒரு சமுதாயம் போர் செய்தால் அவ்விருவரும் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்வார்கள். அதாவது இரு சமுதாயத்தில் எந்த சமுதாயத்துடன் மற்றவர்கள் போர் செய்தாலும் இவ்விரு சமுதாயமும் ஒருவருக் கொருவர் ஒத்தாசை செய்ய வேண்டும். அவ்வாறே எவராவது மதீனாவை தாக்கினால் முஸ்லிம்கள், யூதர்கள் இருவரும் சேர்ந்து அவரை எதிர்க்க வேண்டும்.

7. மக்கத்து குரைஷிகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவளிப்பவர்களுக்கு யூதர்களின் சார்பாக எந்த விதமான உதவியும் அடைக்கலமும் கொடுக்கக் கூடாது.

ஏனெனில் மக்கத்து குரைஷிகள் தான் முஸ்லிம்களை மக்காவிலிருந்து வெளியேற் றினர். பின்பு முஸ்லிம்கள், மதீனாவில் வந்து தஞ்சம் புகுந்தனர். எனவே, இனி இந்த மதீனாவில் வாழ்பவர்கள் அந்த எதிரி சமுதாயத்துடன் எந்தவித உடன்படிக்கையும் செய்யக் கூடாது. எந்த உதவியும் வாங்கக் கூடாது. ஒவ்வொரு சமுதாயமும் தன் செலவுகளை தானே ஏற்றுக் கொள்ள வேண்டும். உடன்படிக்கையினால் எந்த அநியாயக்காரரும், குழப்பவாதியும் தண்டிக்கப்படுவதிலிருந்தோ பழி வாங்கப் படுவதிலிருந்தோ தப்பித்திருக்க மாட்டார்கள். அதாவது அநியாயம் செய்தால் குழப்பம் செய்தால் அவர் முஸ்லிமாக இருந்தாலும், யூதராக இருந்தாலும் யாராக இருந்தாலும் அவர் பிடிக்கப்படுவார். அவருக்கு தண்டனை வழங்கப்படும்.

பிறகு இந்த மத நல்லிணக்கத்தையும் மார்க்க சுதந்திரத்தையும் நிலைநாட்டு வதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நஜ்ரானிலிருந்து வந்திருந்த கிறிஸ்தவ குழுவுக்கு மஸ்ஜிதே நபவியில் அவர்களின் மார்க்க வழி முறைப்படி வணங்குவதற்கு அனுமதியளித்தார்கள். அந்த கிறித்தவர்கள் கிழக்கு நோக்கி முகம் திருப்பியவாறு தொழுதனர். அவ்வாறு கூடாது என நபித் தோழர்கள் கூறினர். பரவாயில்லை என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பிறகு நஜ்ரான் மக்களுக்கு வாக்குறுதி கொடுத்த சம்பவமும் வருகிறது. முஸ்லிம் இராணுவத்தின் மூலமாக எந்த கிறித்தவ

நாடுகள் முஸ்லிம்களின் பக்கம் வருகின்றதோ அவற்றை நாங்கள் பாதுகாப்போம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். கிறித்தவர் களின் தேவாலயங்கள் வணக்க ஸ்தலங்கள், பயணிகள் இல்லங்கள் அவை எவ்வளவு தூரமான இடங்களில் இருந்தாலும் சரியே, அல்லது நகரங்களிலிருந்தாலும், மலை களிலிருந்தாலும், காடுகளிலிருந்தாலும் அவற்றைப் பாதுகாப்பது முஸ்லிம்களின் பொறுப்பாகும். அவர்களுக்கு தங்கள் மார்க்கத்தின்படி இறை வணக்கம் செய்வதற்கு அனுமதியுண்டு. சுதந்திரம் உண்டு. அந்தக் கிறித்தவர்கள் தற்போது முஸ்லிம் ஆட்சியின் பிரஜைகள் ஆகிவிட்டனர். எனவே அவர் களின் வணக்க ஸ்தலங்களை பாதுகாப்பது முஸ்லிம்களின் கடமையாகும் என்றார்கள்.

முஸ்லிம்கள் தங்கள் போர்களில் அந்தக் கிறித்தவர்களை அவர்களின் விருப்பத்திற்கு மாற்றமாக சேர்த்து கொள்ள மாட்டார்கள். அவர்களின் பாதிரிமார்கள் அல்லது மார்க்கத் தலைவர்கள் எந்த பொறுப்பிலிருக்கிறார்களோ அதிலிருந்து நீக்கப்பட மாட்டார்கள். அவர் களின் வணக்க ஸ்தலங்களை முஸ்லிம்கள் கையகப்படுத்த மாட்டார்கள். அவர்களிடம் கேட்காமல் அந்த இடங்கள் வேறு எதற் காகவும் பயன்படுத்தப்பட மாட்டாது.

ஒரு முஸ்லிம் கிறித்தவராக மாறினாலும் அவருக்கு அதற்கு முழுமையான சுதந்திரம் உண்டு. திருச்சபைகளின் சீரமைப்புப் பணிக்காக கிறித்தவர்கள் முஸ்லிம்களிடம் பண உதவியோ தொண்டு உதவியோ வாங்க விரும்பினால் முஸ்லிம்கள் செய்ய வேண்டும். அது நன்மையோ கடனோ அல்ல. மாறாக ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு தர வேண்டும் என்ற உடன்படிக்கையை உறுதி யூட்டுவதாகவே அது அமையும்.

இதுதான் மதநல்லிணக்கம், மத சுதந்திரம் ஆகியவற்றை நிலை நாட்டுவதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உன்னத நிலை. அப்படியிருந்தும் இஸ்லாம் வாளினால் பரப்பப்பட்டது என்று அன்னாரின் மீது குற்றம் சாட்டுவது மிகவும் கொடுமையானது.

(10.3.2006 அன்று ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபதுல் மஸீஹ் ஆற்றிய ஜுமுஆ பேருரையிலிருந்து)

M. மன்சூர் அஹ்மத்

---

**2ஆம் பக்க தொடர்ச்சி....**

செல்வத்திலும் மற்றவர்களைவிட அதிக அபிவிருத்திகள் வழங்கப்படும் என நான் உறுதி கொள்கிறேன். ஏனெனில் செல்வம் தானாக வருவதில்லை; மாறாக, இறைவனின் நாட்டத்தினால் வருகின்றது. எனவே எவர் இறைவனுக்காக செல்வத்தின் சில பகுதியை விட்டு விடுகின்றாரோ அவர் கண்டிப்பாக அதனைப் பெறுவார். ஆனால் ஒருவர் செல்வத்தின் மீது நேசம் கொண்டு இறைவழியில் தொண்டு செய்ய வேண்டிய அளவுக்கு தொண்டு செய்யவில்லை என்றால், அவர் கண்டிப்பாக அந்த செல்வத்தை இழப்பார். செல்வம் உங்களுடைய முயற்சியினால் வருகிறது என்று கருதாதீர்கள். மாறாக, அது இறைவனிடமிருந்து வருகின்றது. எனவே நீங்கள் செல்வத்தின் ஒரு பகுதியைக் கொடுத்து விட்டு அல்லது ஏதாவது தொண்டு செய்து விட்டு இறைவன் மீதும், அவனுடைய தூதர் மீதும் நன்மை செய்கிறோம் எனக் கருதாதீர்கள். இந்த தொண்டிற்காக அவன் உங்களை அழைத்திருப்பது அவன் உங்கள் மீது செய்த அருளாகும்... உங்களுடைய தொண்டுகளுக்கு இறைவன் கொஞ்சமும் தேவையுடையவன் அல்லன். ஆனால், அவன் உங்களுக்கு தொண்டு செய்ய வாய்ப்பளிப்பது அவன் உங்கள் மீது செய்த அருளாகும்.'' (மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3, பக்கம் 496).

## நபித்தோழரின் வாழ்க்கை வரலாறு

# ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹுா அன்ஹா)

**மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A**

ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் அரபு நாட்டில் குரைஷி குலத்தைச் சேர்ந்த கண்ணியத்திற்குரிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணாக விளங்கினார். அவருடைய தந்தை பெயர் குவைலித் பின் அஸத் பின் அப்தில் உஸ்ஸா என்பதாகும். தாயார் பனூ லோயே குடும்பத்தைச் சேர்ந்த ஃபாத்திமா பின்த் ஸாயித் ஆவார். ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் முதல் திருமணம் பனூ மக்ஸூம் என்ற குடும்பத்தைச் சேர்ந்த அதீக் பின் ஆயிஸ் என்பவருடன் நடந்தது. அவர் மூலமாக ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுக்கு ஹிந்த் என்ற பெயரைக் கொண்ட ஒரு பெண் குழந்தை இருந்தார். முதல் கணவரின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் திருமணம் மாலிக் பின் நப்பாஷ் என்பவருடன் நடந்தது. இவர் மூலமாக ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. ஒன்றின் பெயர் ஹிந்த். இன்னொன்றின் பெயர் ஹாலா. இந்த ஹாலாவை அடிப்படையாகக் கொண்டே ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் இரண்டாம் கணவரின் பெயர் அபூஹாலா (ஹாலாவின் தந்தை) என்று பிரபலமானது. இவருடைய மரணத்திற்குப் பிறகு, குரைஷி குலத்தைச் சேர்ந்த மிகவும் கண்ணியத்திற் குரியவரும் செல்வச் சீமாட்டியு மாகத் திகழ்ந்த ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் தமது வாணிபப் பொருள்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக தமது ஓர் அடிமையுடன் ஷாம் நாட்டை நோக்கி அனுப்பி வைத்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நேர்மை, நியாயம், உண்மை ஆகியவற்றைப் பற்றி ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுக்கு தெரிய வந்தது.

இன்னும் சில அறிவிப்புகளின் மூலமாகத் தெரிய வருவதென்னவென்றால், ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுக்கு ஒரு சகோதரி இருந்தார். அவருடனும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவருடைய ஒரு நண்பரும் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். அவர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைவிட நேர்மையான, வெட்க உணர்வு கொண்ட, தூய்மை யான இயல்பு கொண்ட வேறுயாரையும் நான் காணவில்லை என சாட்சி பகர்ந்தார். தம் சகோதரியின் தூண்டுதலினால் தான் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் திருமணம் நடைபெற்றது எனலாம்.

கதீஜா (ரலி) அவர்களின் சகோதரரி கதீஜாவின் விருப்பத்துடனேயே இந்தத் தூதுச் செய்தியை எட்ட வைத்தபோது, அவ்விருவருக்கும் இடையில் வயதில் பெரும் வித்தியாசம் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு 25 வயதாகவும், ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுக்கு 40 வயதாகவும் இருந்தது. ஆனால் நல்ல செல்வச் செழிப்புள்ள வீட்டில் வளர்ந்த பெண்ணாக இருந்ததால், ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் ஆரோக்கியமும் அந்த நேரத்தில் நன்றாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த தூதுச் செய்தி கிடைத்தபோது அவர்களும் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் நாணயத்தையும், கற்பையும் கருத்தில் கொண்டு இந்த முடிவை ஒப்புக் கொண்டார்கள். ஆயினும் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் தந்தை மக்காவில் புகழ்பெற்ற செல்வந்தரும் கண்ணியத்திற் குரியவருமாக இருந்தார். அவர் ஒருவேளை இதை விரும்பமாட்டார் எனக் கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களும், அவர் சகோதரியும் செய்த ஏற்பாட்டினால் அவர்களின் தந்தை ஒப்புக் கொண்டுவிட்டார். அவர் தம் வீட்டில் விருந்திற்கான ஒரு ஏற்பாட்டை செய்து, அதில் குரைஷிகளின் தலைவர்களை விருந்துக்கு அழைத்து அதில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் திருமணம் செய்து கொள்ள தம் தந்தையிடம் அனுமதி வேண்டினார்கள். அவரும் மக்களின் சபையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை மணம்

முடித்துக் கொள்ள தம் மகள் கதீஜாவுக்கு அனுமதி வழங்கிவிட்டார்கள்.

திருமணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் தம்மிடமிருந்த அனைத்து செல்வங் களையும் அடிமைகளையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அர்ப்பணித்து விட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் அந்த செல்வங்களை அல்லாஹ்வின் வழியில் அர்ப்பணித்து விட்டார்கள். அடிமைகளை விடுவித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபித்துவ வாதம் புரிந்த போது முதன்முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுக்குத் தான் கிடைத்தது. இதில் எல்லா வரலாற்றாசிரியர்களும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். எல்லா ஆண்களையும் பெண்களையும் சிறுவர் களையும் விட முதன் முதலில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாதத்தை உண்மைப்படுத்தி அவர்களை ஒப்புக் கொள்ளும் நற்பேறு முதன் முதலில் ஹஸ்ரத் கதீஜாவுக்குத் தான் கிடைத்தது. இவ்விதமாக இவர்கள் ஆரம்ப காலத்திலிருந்தே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களிலும் துயரங்களிலும் பங்கு கொள்பவர்களாகத் திகழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிரா குகையில் சென்று தனிமையில் இறை தியானத்தில் ஈடுபட்டு வந்தார்கள். அவர்கள் குகைக்குச் செல்லும் போது ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் கொஞ்சம் உணவுப் பொருள்களை கொடுத்தனுப் புவார்கள். இஃதிகாஃபைப் போன்ற ஒரு நிலையிலேயே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனிமையில் இறைதியானத்தில் மூழ்கிவிட்டு வீடு திரும்பினார்கள். அவர்கள் மீண்டும் ஹிரா குகைக்கு செல்லும்போது ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் மேலும் கொஞ்சம் உணவுப் பொருள்களை கொடுத்தனுப்புவார்கள். இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைவனிடமிருந்து முதல் வஹி இறங்கும் வரை இது தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

முதல் வஹியைப் பெற்ற அந்த சம்பவத்தில் ஒரு வானவர் வந்து அன்னாரிடம் உரையாடினார். அவர் வரும்போது ஒளியையும் கண்டார்கள். ஓசையையும் கேட்டார்கள். அதன் விளைவாக இயல்பாகவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு கொஞ்சம் அச்ச உணர்வு ஏற்பட்டது. அவர்கள் அச்சத்தால் நடுங்கியவாறு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களிடம் வந்து, ஸம்மிலூனீ; ஸம்மிலூனீ என்னைப் போர்த்துங்கள்; என்னைப் போர்த்துங்கள் எனக் கூறினார்கள். மேலும் கதீஜாவே! எனக்கு என்ன ஆகிவிட்டது! எனக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது எனக் கூறினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் மிகவும் கம்பீரமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பாராட்டி தைரியமூட்டினார்கள். அன்னாரின் நற்பண்புகளைப் பற்றி அருமையாக சாட்சி கூறினார்கள்: உண்மையில் அவற்றையே சான்றாகக் கொண்டு அன்னாரிடம் கூறினார்கள். இது நீங்கள் அச்சப்பட வேண்டிய இடமல்ல. உண்மையில் இது உங்களுக்கு அருமையான தூதுச் செய்தியாகும். அல்லாஹ் உங்களை ஒருபோதும் அவமானத் திற்காளாக்க மாட்டான். நீங்கள் உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்கிறீர்கள். நீங்கள் உண்மை பேசுகின்றீர்கள். மக்களின் சுமைகளைத் தாங்கிக் கொள்கிறீர்கள். விருந்தோம்பல் செய்கின்றீர்கள். கஷ்டமான நிலைமைகளில் மக்களுக்கு உதவி செய்கின்றீர்கள். இப்படிப்பட்ட மேலான ஒழுக்கங்களைக் கொண்டவருக்கு எந்த அபாயமும் இருக்க முடியாது எனக் கூறினார்கள். இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்பண்புகளை எடுத்துரைத்து அன்னாருக்கு ஆறுதல் வழங்கினார்கள்.

ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் இத்துடன் நில்லாமல், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மேலும் ஆறுதல் அளிப்பதற்காக அவர்களை தமது சிறிய தந்தையின் மகன் வராகா பின் நவ்ஃபில் என்பவரிடம் அழைத்துச் சென்றார்கள். அவர் கிறித்தவராவார். அரபு மொழி நன்கு அறிந்தவர். தவ்ராத், இஞ்சீலையும் கற்றவர். அவரிடம் சென்று என் சிறிய தந்தையின் மகனே!

இவருடைய சம்பவத்தைக் கேளுங்கள் என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் சம்பவத்தைக் கூறியதும் இவரிடம் வந்த வானவர் மூஸாவிடம் வந்த அதே வானவர்தான் எனக் கூறினார். மேலும் உமது சமுதாயம் உம்மை நாட்டை விட்டு வெளியேற்றிவிடும். அந்தோ! நான் இளைஞனாகவும், உடல் ஆரோக்கியமுள்ள வனாகவும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! என்று கூறினார். இதைக் கேட்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், என் சமுதாயம் என்னை நாட்டை விட்டு வெளியேற்றிவிடுமா? எனக் கேட்டார்கள். அதற்கு அவர், ஆம். அதற்கு முன்பும் (இறைதூதருடன்) இப்படித் தான் நடந்து வந்திருக்கிறது என்று கூறினார்.

பிற்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வராகாபின் நவ்பில் பற்றி கேள்வி கேட்கப்பட்டது. அவர் துவக்க காலத்தில் தங்களை உண்மைப்படுத்தினார்கள் என்றாலும், தங்களின் நுபுவ்வத் வாதத்திற்கு முன்னரே அவர் இறந்து விட்டாரே! அவர் நிலை என்னவாகும் எனக் கேட்கப்பட்டது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நான் கனவில் அவர் வெண்ணிற ஆடை அணிந்தவராகக் கண்டேன். அவர் நரகவாசியாக இருந்திருந்தால் அவர் வெண்ணிற ஆடையை அணிந்திருக்க மாட்டார் எனக் கூறினார்கள். அதாவது சுவர்க்க வாசிகளின் ஆடை.

ஆக, ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், வஹியைப் பெற்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உண்மைப் படுத்தும் திறன்கொண்ட வராகா பின் நவ்ஃபிலிடம் அழைத்துச் சென்றது அவர்களின் நுண்ணறிவைச் சுட்டிக் காட்டுகிறது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் கதீஜாவின் ஒரு சிறப்பாக ஒன்றைக் கூறினார்கள். அதாவது அல்லாஹ் அவர் மூலமாக எனக்கு குழந்தைகளை வழங்கினான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சந்ததிகளான காஸிம், தய்யுப், தாஹிர், அப்துல்லாஹ் ஆகியோர் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் வயிற்றில் பிறந்தவர்கள்தான். அவ்வாறே ஸய்னப், ருகய்யா, உம்மு குல்ஸூம், ஃபாத்திமத்துஸ் ஸுஹரா ஆகிய பெண்மக்களும் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் வயிற்றில் பிறந்தவர்களேயாவர்.

ஹஸ்ரத் ஸய்னப் (ரலி) அவர்களின் திருமணம் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் விருப்பத்திற் கிணங்க அவருடைய சகோதரி மகன் அபுல் ஆஸ் என்பவருடன் நடந்தது. பத்ர் போரில் இவர் கைதியாக பிடிபட்டு கொண்டு வரப்பட்டார். தன் கணவரை ஃபித்யா (இழப்பீடு) கொடுத்து விடுவிப்பதற்காக மக்காவிலிருந்த ஸய்னப் தன் தாயார் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் தனது திருமணத்தின் போது அன்பளிப்பாகக் கொடுத்த செயினை அனுப்பிவைத்தார்கள். அந்த செயினைப் பார்த்ததும் ஹஸ்ரத் நபி (ஸல்) அதை அடையாளம் கண்டு கொண்டார்கள். அப்போது அவர்களுக்கு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் நினைவு வந்தது. அவர்களுக்கு உருக்கம் ஏற்பட்டது. ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் செய்த நன்மைகளை நினைத்து அவர்களின் கண்கள் கண்ணீரால் நனைந்தன. அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம், நீங்கள் அனுமதி வழங்கினால், அபுல்ஆஸை இந்த செயினை ஈட்டுத் தொகையாகப் பெறாமலேயே விடுவித்து விடுங்கள் என்றார்கள். அதற்கு பதிலாக அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகள் ஹஸ்ரத் ஸய்னப் (ரலி) அவர்களை நலமாக மதீனாவிற்கு கொண்டு வந்து சேர்த்துவிட வேண்டும் என்று கூறப்பட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த விருப்பத்தை நபித் தோழர்கள் ஏற்றுக் கொண்டவாறு அந்த செயினை திருப்பிக் கொடுத்து விட்டார்கள். மேலும் அபுல்ஆஸ் ஈட்டுத் தொகை பெறாமலேயே விடுவிக்கப் பட்டார். அவரும் மக்கா திரும்பிய உடன் ஸய்னப் (ரலி) அவர்களை மதீனாவுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து சேர்வதற்கான ஏற்பாட்டை செய்தார். அபுல்ஆஸ் தம் வாக்குறுதியை காப்பாற்றியதை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பின்னர் பலமுறை நன்றியுணர்வுடன் எடுத்துக் கூறிக்கொண்டிருந் தார்கள். உண்மையில் அவருடைய இந்த நேர்மைதான் பிற்காலத்தில் அவர் இஸ்லாத்தைத் தழுவும் வாய்ப்புக்குக் காரணமாக அமைந்தது.

(தொடரும்)

# சிறுவர் பகுதி

தொழுகையின் முதல் ரக்அத்தில் இரண்டாவது முறை ஸுஜூது செய்வது வரை சென்ற இதழில் பார்த்தோம். இத்துடன் முதல் ரக்அத் நிறைவு பெறுகிறது. இதன் பின்னர் அல்லாஹு அக்பர் என்று கூறி நேராக எழுந்து நின்று தக்பீர் கட்ட வேண்டும். முதல் ரக்அத்தில் ஓதிய துஆக்களை அடுத்து வருகின்ற ரக்அத்களில் ஓதவேண்டியதில்லை. தஅவ்வூத் மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதவேண்டும். அதன் பின்னர் திருக்குர்ஆனின் ஏதாவது ஓர் அதிகாரத்தின் சில வசனங்களை ஓதவேண்டும். முதல் ரக்அத்தில் ஓதிய அதிகாரத்தையே திரும்பவும் ஓதாமல் வேறு ஏதாவதொரு அதிகாரத்தை ஓதுவது ஒழுங்குமுறையாகும். உதாரணமாக, அதிகாரம்-113 ஆகிய 'அல்ஃபலக்'கை ஓதலாம்:

**பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்**

**குல் அஊது பிரப்பில் ஃபலக், மின் ஷர்ரி மா ஹலக், வமின் ஷர்ரி காஸிகின் இதா வகப், வமின் ஷர்ரிந் நஃப்ஃபாஸாதி ஃபில் உகத், வமின் ஷர்ரி ஹாஸிதின் இதா ஹஸத்**

பொருள்: அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்). நீர் கூறுவீராக! இயற்கை நியதியின் இறைவனிடம் நான் பாதுகாப்புத் தேடுகின்றேன். அவன் படைத்தவற்றின் தீங்கிலிருந்தும், இருள் பரவும் போது, அதன் தீங்கிலிருந்தும், (உறவுத் தொடர்புகளின்) முடிச்சுகளில் (அவற்றை முறிப்பதற்காக) ஊதுபவர்களின் தீங்கிலிருந் தும், பொறாமைக்காரன், பொறாமை கொள் கின்றபோது ஏற்படுகிற தீங்கிலிருந்தும், (நான் பாதுகாப்புத் தேடுகிறேன்.)

அடுத்து, அல்லாஹு அக்பர் என்று கூறி 'ருகூ' செய்ய வேண்டும். இவ்வாறு இரண்டா வது ஸுஜூது வரை முதல் ரக்அத்தில் எவ்வாறு தொழுதோமோ அவ்வாறு தொழவேண்டும்.

இரண்டாவது ஸுஜூதிற்குப் பிறகு அல்லாஹு அக்பர் என்று கூறி நிமிர்ந்து இடது காலின் மீது அமர்ந்து வலது கால் பாதத்தை நேராக நிறுத்தி அதன் பெருவிரலை மேற்கு நோக்கி வைத்து இரு கைகளையும் கால் முட்டுகளின் மீது வைத்து பின்வரும் துஆவை ஓத வேண்டும். இதற்கு 'அத்தஹிய்யாத்' என்று சொல்லப்படும்:-

**அத்தஹிய்யாது லில்லாஹி வஸ்ஸல வாத்து வத் தய்யிபாத்து, அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வரஹ்மத் துல்லாஹி, வபரகாதுஹூ. அஸ்ஸாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ், ஸாலிஹீன். அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு, வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ**

பொருள்: சொல்லினாலும், செயலினாலும், பொருளினாலும் செய்கின்ற எல்லா வணக்கங்களும் அல்லாஹ்வுக்கே உரியன. நபியே! சாந்தியும், அல்லாஹ்வின் கருணையும், அவனது அருளும் உங்கள் மீது உண்டாவதாக. எங்கள் மீதும், அல்லாஹ்வின் நல்லடியார்கள் மீதும், சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக, வணக்கத் திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனுடைய தூதரும் ஆவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்.

அத்தஹிய்யாத்தில் 'அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ்' என்று கூறும்போது வலது கையின் சுட்டு விரலை உயர்த்த வேண்டும்.

இந்த துஆவுக்குப் பிறகு, எழுந்து மூன்றாவது ரக்அத்திற்கான தக்பீர் கட்ட வேண்டும். இரண்டு ரக்அத் தொழுகையாக இருந்தால் இந்த அமர்வு கடைசியானதாக இருக்கும். எனவே, அதற்குப் பிறகு பின்வரும் 'தரூத் ஷரீஃப்' (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது சிறப்பான பிரார்த்தனை) ஓதவேண்டும்.

**அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம் வஅலா ஆலி இப்ராஹீம் இன்னக ஹமீதும் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம் இன்னக ஹமீதும் மஜீத்.**

பொருள்: இறைவா! நீ இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவருடைய குடும்பத்தார் மீதும் கருணை காட்டியதுபோல் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தார் மீதும் கருணை காட்டுவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மகத்துவமுள்ளவனும் ஆவாய்.

இறைவா! இப்ராஹீம் (அலை) அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் நீ அளவற்ற அருட்களை வழங்கியது போன்று முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத் திற்கும் அருள் புரிவாயாக. நிச்சயமாக நீ புகழுக் குரியவனும் மகத்துவம் உள்ளவனும் ஆவாய்.

இதன் பிறகு திருக்குர்ஆன் மற்றும் ஹதீதுகளில் உள்ள துஆக்களை ஓதலாம். சில துஆக்களை கீழே தருகிறோம்:-

**ரப்பனா ஆத்தினா ஃபித்துன்யா ஹஸனதன் வஃபில் ஆகிரதி ஹஸனதன் வக்கினா அதாபன்னார். (2 : 202)**

**ரப்பிஜ்அல்னீ முக்கீமஸ் ஸலாத்தி வமின் துர்ரிய்யத்தீ ரப்பனா வத்தகப்பல் துஆ. ரப்பனக்ஃபிர்லீ வலி வாலிதய்ய வலில் முஃமீனீன யவ்ம யக்கூமுல் ஹிஸாப் (14 : 41, 42)**

பொருள்: எங்கள் இறைவா! எங்களுக்கு இவ்வுலகிலும் வெற்றியினை (வழங்கு வாயாக). மறுஉலகிலும் வெற்றியினை (வழங்குவாயாக) எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்தும் காப்பாற்றுவாயாக. (திருக்குர்ஆன் 2 : 202)

என் இறைவா! என்னையும் என் சந்ததிகளையும் தொழுகையினை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றுபவர்களாக்கி வைப் பாயாக. எங்கள் இறைவா! என் பிரார்த் தனையை ஏற்றுக்கொள்வாயாக. எங்கள் இறைவா! கேள்வி கணக்கு நிகழும் நாளில், எனக்கும், என் பெற்றோருக்கும், நம்பிக்கை கொண்டவர் =களெல்லாருக்கும் நீ மன்னிப்பு வழங்குவாயாக. (திருக்குர்ஆன் : 14 :41, 42)

இதன் பிறகு வலது பக்கம் முகம் திருப்பி அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ் (பொருள் : உங்களுக்கு சாந்தியும், அல்லாஹ்வின் அருளும் உண்டாவதாக) என்று கூறவேண்டும். பிறகு இடது பக்கம் முகம் திருப்பி 'அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ்' என்று கூறவேண்டும்.

இத்துடன் தொழுகை முடிந்துவிடுகின்றது. இதன் பின்னர் சுன்னத் தொழுகை தொழுவதற்கு முன்னர் இறைவனைப் புகழ்ந்து கீழ்வருமாறு ஓதவேண்டும்:

**அல்லாஹும்ம அன்தஸ் ஸலாமு வமின்கஸ் ஸலாமு. வதபாரக்த ரப்பனா யாதல் ஜலாலி வல் இக்ராம். அல்லாஹும்ம லா மானிய லிமா அஃதைத்த வலா முஃதிய லிமா மனஃத்த. வலா யுன்ஃபஹு துஜ்ஜதம் மின்கத் துஜ்ஜத்**

பொருள்: அல்லாஹ்வே! நீ சாந்தி யுடையவன். உன்னிடமிருந்து சாந்தி உருவாகின்றது. கம்பீரத்தையும் கண்ணியத் தையும் கொண்ட எங்கள் இறைவா! நீ அருளுக்குரியவன். அல்லாஹ்வே! நீ வழங்கி யதை தடுப்பவர் யாருமில்லை. நீ தடுத்ததை வழங்குபவர் யாருமில்லை.

இதன் பிறகு 33 தடவை **'சுப்ஹானல்லாஹ்'** (அல்லாஹ் தூயவன்) என்றும் 33 தடவை **'அல்ஹம்துலில்லாஹ்'** (எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே) என்றும் 34 தடவை **'அல்லாஹு அக்பர்'** (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்றும் சொல்ல வேண்டும்.

பள்ளிவாசலில் சென்று தொழுகையை நிறைவேற்றுபவர்கள், தொழுகையை முடித்து வெளியே வரும்போது முதலில் இடது காலை வெளியில் எடுத்து வைக்க வேண்டும். பின்வரும் துஆவைச் செய்து வெளியேற வேண்டும்.

**பிஸ்மில்லாஹிஸ் ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரஸூலில்லாஹி அல்லாஹும் மக்ஃபிர்லீ ஸுனூபீ வஃப்தஹ்லீ அப்வாப ஃபள்ளிக்க.**

பொருள்: அல்லாஹ்வின் பெயரால் வெளியேறுகிறேன். அல்லாஹ்வின் தூதர் மீது சலாத்தும், சலாமும் உண்டாவதாக. அல்லாஹ்வே! என் பாவங்களை எனக்காக மன்னிப்பாயாக. மேலும் எனக்காக உன் அருளின் வாசல்களைத் திறந்தருள் வாயாக. (தொடரும்) **எம். நயீம் அஹ்மத்**

சென்ற் இதழ் தொடர்ச்சி...

# அஹ்மதிய்யத் உலகிற்கு வழங்கியது என்ன?

மவ்லானா அத்தாவுல் முஜீப் ராஷித்

**ஆன்மீகக் கருவூலங்கள்**

''அவனே தனது தூதரை நேர் வழியுடனும் உண்மையான மார்க்கத்துடனும் இதனை அவன் எல்லா மார்க்கங்களின் மீதும் வெற்றிபெறச் செய்வதற்காக அனுப்பினான். (இறைவனுக்கு) இணைவைப்பவர்கள் (இதனை) எந்த அளவு வெறுத்தாலும் சரியே''. (அதிகாரம்:அஸ்ஸஃப் வசனம்:10)

மேற்கண்ட இறைவசனத்திற்கேற்ப, வரக்கூடிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இஸ்லாத்திற்கு மற்றெல்லா மார்க்கங்களின் மீதும் மேலோங்குதல் வழங்குவதற்குக் காரணமாக அமைவார் என்பது விதிக்கப்பட் டுள்ளது. ஹஸ்ரத் வாக்களிக் கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலமாக இந்த முன்னறிவிப்பு மாபெரும் மகத்துவத்துடனும் வல்லமையுடனும் நிறைவேறியது. இதன் ஓர் உன்னத முன்மாதிரி லாஹூரில் 1896இல் நடைபெற்ற மாபெரும் 'சர்வ சமய மாநாடு' ஆகும். இதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட ஐந்து கேள்விகளுக்கான பதிலில் இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானத்தை எந்தளவுக்கு அழகிய முறையில் எடுத்து வைத்தார்கள் என்றால், இந்த உரை அனைத்தையும் விட சிறந்தது என அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள்.

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு தன்புறமிருந்து அறிவாற்றலையும் ஞானங்களையும் வழங்கி அவற்றை அழகிய நடையில் எடுத்துக் கூறும் ஆற்றலையும் வழங்கினான். அன்னாரின் சொற்கள் உள்ளங்களை ஈர்க்கும் அசாத்திய தாக்கத்தைக் கொண்டவையாகும். இவ்விஷ யத்தை எதிரிகளும் ஒப்புக் கொண்டனர். அன்னாரின் மரணத்தின் போது இந்தியாவின் இமாம் என்றழைக்கப்பட்ட மவ்லானா அபுல்கலாம் ஆஸாத் அன்னாரை ஓர் வெற்றி வாகை சூடும் படைத்தளபதி எனக்குறிப் பிட்டார். அன்னாருக்கு கிடைக்கப்பெற்ற இந்த ஞானமிக்க அறிவாற்றல் வானத்திலிருந்து கிடைத்த போர் ஆயுதமாகும். இது அனைத்து எதிரிகளின் கோட்டைகளையும் இடித்து தரைமட்ட மாக்கியவாறு சென்றது. ஈடு இணையற்ற தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இந்தக் கருவூலம் அன்னாரது மரணத்திற்குப் பின்னும் குறைவடைய வில்லை. இந்த ஞானக் கூற்றுகள், இஸ்லாத்தின் வெற்றி போன்ற வற்றிற்கு ஆதாரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்த ஞானக்கடலிலிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கை பரப்புநர்கள் பலனடையவே செய்கின் றனர். அஹ்மதிய்யல்லாத ஆலிம்களும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களிலுள்ள கருத்துகளை தமது சொற்பொழி வுகளிலும் நூல்களிலும் அதிகமதி கமாக பயன்படுத்துகின்றார்கள். ஆனால் அதன் ஆதாரத்தை வழங்க அவர்களுக்கு தைரிய மில்லை. இதுதான் அஹ்மதிய்யத் உலகிற்கு வழங்கியுள்ள வலுவான ஞானக்கூற்றுகளாகும். இது ஒவ்வொரு போட்டியின் மைதானத்திலும் வெற்றிக்கான உத்திரவாதமாகும். குறிப்பாக கிறிஸ்தவர்களுடான போட்டியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆதாரங்கள் எத்தகைவை என்றால் அவற்றிற்கு, கிறிஸ்தவர்களால் ஒருபோதும் பதிலளிக்க இயலாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரவிருக்கும் வாக்களிக்கப்பட்டவரின் ஒரு வேலை 'சிலுவையை முறிப்பதாகும்' எனக்கூறியிருந்தார்கள். இதன் மாபெரும் துவக்கம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலும் அதன் பிறகு ஒவ்வொரு காலத்திலும் மகத்தான முறையில் காணப் படுகின்றன. ஹஸ்ரத் வாக்களிக்கப் பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பொய்யை தோல்வி காணச் செய்யும் தனது ஆதாரங்களால் 'பாதிரி லீஃப் ராயை' வாயடைக்கச் செய்தார்கள். இதனை மௌலவி நூர்முஹம்மது சாஹிப் ஏற்றுக் கொண்டவாறு இவ்வாறு கூறினார்: ''அவர்

இந்தியா முதல் கிறிஸ்துவ நாடுகள் வரையுள்ள அனைத்து பாதிரியார் களையும் தோல்வி காணச் செய்து விட்டார்'' (முகவுரை, மு அஸ்ஸஸ் நுமாகலான் குர்ஆன் ஷெரீஃப், முதர்ஜிம் வெளியீடு 1934-பக்கம் 30)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உலகிற்கு வழங்கியுள்ள ஆன்மீக கருவூலங்கள் 90க்கும் அதிகமான நூல்கள் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவர்களுக்குப்பின் அவர்களது கலீஃபாக்கள் இந்த அமைப்பை தொடரச் செய்து நூல்வடிவில் புதிதிலும் புதிய ஞானங்களை உலகிற்கு வழங்கிக் கொண்டிருக் கிறார்கள். ஜமாஅத்தின் மார்க்க அறிஞர்களும் இந்த தித்திப்பான நீரூற்றிலிருந்து எண்ணற்ற அருட்களைப் பருகியவாறு மகத்தான வெளியீடுகளின் அன்பளிப்பை உலகிற்கு வழங்கியுள்ளனர். 57 மொழிகளில் திருக்குர்ஆன் வெளியீடு, குர்ஆன் விளக்க வுரைகள், நபிகளின் விளக்கவுரைகள், பல்வேறு இஸ்லாமிய தலைப்புகளில் கட்டுரைகள், தற்போதைய பிரச்சனைகளின் தீர்வு குறித்த நூல்கள் வெளியீடு, அனைத்து உலக மொழிகளிலும் இந்நூல்களின் மொழியாக்கம், ஜமாஅத் தலைமையகம் மட்டுமின்றி பல்வேறு நாடுகளில் வெளியாகும் பத்திரிக்கைகள், இதழ்கள். இவையனைத்தும் அஹ்மதிய்யத்தின் ஆன்மீக அறிவாற்றல் எனும் ஞான ஊற்றுக்களாகும். இவை நாலாப்புறமும் வேகத்துடன் பாய்ந்து கொண்டேயிருக்கின்றன.

அஹ்மதிய்யத் உலகிற்கு வழங்கியுள்ள அறிவாற்றல் மற்றும் ஞானத்தின் இம்மாபெரும் செல்வத்தைக் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தெளிவாகக் கூறுகிறார்கள்.

''அன்பு எனும் நாட்டின் அரசாட்சியும் இறைஞானம் எனும் கருவூலங்களும் எனக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றை இறையருளால் மக்கள் வாங்கி வாங்கி சோர்ந்து விடும் அளவுக்கு நான் வாரிவாரி வழங்குவேன்''. (ரூஹனி கஸாயின், இலண்டன் வெளியீடு 1984, தொகுதி 3, பக்கம் 566-இஸாலே அவ்ஹாம்)

இதைப்படித்தவுடன் இந்த முன்னறிவிப்புள்ள ஒரு நபிமொழி நினைவுக்கு வருகிறது: ''அதாவது வரவிருக்கும் மஸீஹ் செல்வத்தை வாரி வழங்குவார். எதுவரையென்றால் அதை வாங்க எவரும் முன்வரமாட்டார்கள்'' (புஹாரி கிதாப் பதவுல் கல்க்; பாப், நுஸூலு ஈசப்னு மர்யம் அலைஹுஸ்ஸலாம்)

இன்று இந்த முன்னறிவிப்பு எவ்வளவு மகத்தான முறையில் நிறைவேறியுள்ள தென்றால் முஹம்மதிய்ய மஸீஹ் அறிவு மற்றும் இறை ஞானத்தின் கருவூலத்தை தண்ணீரைப் போன்று வாரியிறைத்து உலகை செழிக்க வைத்து விட்டார்கள். அன்னார் ஒரு கவிதையில் எவ்வளவு அருமையாகக் கூறினார்கள்: ''ஆயிரம் வருடங்களுக்கும் மேலாக புதையுண்டு கிடந்த அக்கருவூலங்களை இப்போது நான் வழங்கு கிறேன். நம்பிக்கை கொண்டவர் ஒருவர் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

**பொது தொண்டு எனும் களத்தில் துடிப்பான செயல்பாடுகள்**

அஹ்மதிய்யத் உலகிற்கு வழங்கியது என்ன? என்பதல்ல கேள்வி. நற்செயல் மற்றும் மேன்மையின் களத்தில் எந்தபொருளை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உலகிற்கு வழங்கவில்லை? என்பதே கேள்வி. எந்த ஒரு சமுதாயத்தின் அல்லது ஜமாஅத்தின் செல்வம் என்பது அதன் மக்களேயாவார்கள். அவர்களின் தொகுப்பினால் ஜமாஅத் உருவாகிறது. அந்த விதத்தில் அல்லாஹ் தனது கரங்களால் நிறுவிய இந்த ஜமாஅத்திற்கு எண்ணற்ற நற்பேறுபெற் றோரை வழங்கி யுள்ளான். அவர்களின் எண்ணிக்கை தனது நிலையிலும் தரத்திலும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே செல்கிறது. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைச் சேர்ந்த ஒவ்வொரு வரும் அனைத்து இடத்திலும் மனிதயினத் திற்கு சேவை செய்ய வேண்டும் என்று உணர்ச்சி பூர்வமாக தத்தமது நாடுகளில் சமுதாயத் திற்கும் மனிதயினத்திற்கும் சேவை செய்வதில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு நாட்டிலும் அஹ்மதிய்யா முஸ்லிம்

ஜமாஅத் தன்னை சமூகச் சேவைகளில் முழுமையாக இணைத்துள்ளது. அனைத்து இடங்களிலும் ஆமோதிக்கப்படும் இந்த பொதுச் சேவைகள் மட்டுமின்றி ஜமாஅத்தின் கலீஃபாக்களும், தலைவர்களும், பல்வேறு துறைகளில் இறைவனால் சிறந்த தகுதிகள் வழங்கப்பட்ட ஜமாஅத் உறுப்பினர்களும் சமுதாயத்திற்காகவும் நாட்டிற்காகவும் மனித இனத்திற்காகவும் தனது சேவைகளை எப்போதும் அர்ப்பணித்து வருகின்றனர் என்பதற்கு ஜமாஅத்தின் வரலாறு சாட்சியாகும்.

அஹ்மதிய்யத் உலகிற்கு என்ன வழங்கியது எனக் கேட்பவர்கள் கேட்கின்றனர். நான் கூறுகின்றேன். எந்தளவுக்கு ஜமாஅத் உலகின் சேவைக்காக தன்னை முன்வைத்துள்ளது என்பது அஹ்மதிய்யத்தின் வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள் தெரியும். சேவையின் எந்த மைதானமாயினும் சரி. ஜமாஅத்தின் இந்த ஆதரவு கிழக்கிலும் மேற்கிலும் ஒவ்வொரு மைதானத்திலும் ஓர் உயர் முன்மாதிரியை தன்னுள் வைத்துள்ளது. பேச்சு உலகில் ஹஸ்ரத் ஷேக் முஹம்மது அஹமது மஸ்ஹர் அவர்களின் சேவைகள். ஆப்பிரிக்காவின் வளர்ச்சி மற்றும் கட்டடப் பணிகளில் ஷேக் உம்ரி உபைதி அவர்களின் சேவைகள். பாகிஸ்தானின் பொருள் ரீதியான முன்னேற்றம் மற்றும் கட்டுறுதியில் ஹஸ்ரத் மிர்ஸா முஸஃப்பர் அஹ்மது அவர்களின் சேவைகள். நாட்டின் தற்காப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகளில் லெஃப்டினன்ட் ஜெனரல் அக்தர் ஹுஸைன் மலக், லெஃப்டினன்ட் ஜெனரல் அப்துல் அலி மலக், முஜாஹிதுகள் ஃபோர்ஸ் ஆகியோர்களின் சேவைகளை நல்ல மனிதர்களால் எவ்வாறு மறக்க முடியும்? விஞ்ஞான மைதானத்தில் டாக்டர் பேராசிரியர் அப்துஸ் ஸலாம் அவர்கள் செய்த பணியும் பெற்ற பெயரும் புகழும் கூறத்தேவையில்லை. பாகிஸ்தான் மண்ணில் புகழ்பெற்ற இவர் ‘நோபல்’ பரிசைப் பெற்று பாகிஸ்தானை மட்டுமின்றி முழு இஸ்லாமிய உலகையையும் பெருமையோடு தலைநிமிர வைத்தார். பிறகு பரிசின் மூலம் கிடைக்கப் பெற்ற அனைத்து தொகையையும் தன் அன்புமிக்க தாய்நாட்டின் விஞ்ஞான வளர்ச்சிக்காக அர்ப்பணித்து தியாகத்தின் ஓர் ஒளிமயமான முன்மாதிரியை நிலைநாட்டினார். இந்த அஹ்மதி முஸ்லிம் விஞ்ஞானி முஸ்லிம்களின் மத்தியில் ஓர் தூண்டுதலையும் தைரியத்தையும் வழங்கினார். நம்பிக்கையை வளர்த்து முன்னேற்றத்தின் எண்ணத்தை வழங்கினார்.

தனது தாய்நாட்டின் உறுதி மற்றும் வலிமைக்காக ஆற்றிய சேவைகள், உலகநீதி மன்றத்தில் நேர்மை நீதி என சட்டத்திற்கு ஆற்றிய தொண்டு, இவையனைத்தையும் விட பல்வேறு இஸ்லாமிய நாடுகளுக்கு சுதந்திரம் எனும் கொடை கிடைக்க வேண்டும் என்பதற்காக துடியாத்துடித்த ஹஸ்ரத் ‘சவுத்ரி முஹம்மது ஸஃபருல்லா கான்’ அவர்களின் சேவைகள் உலக வரலாற்றில் பொன்னெழுத்து களால் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த அஹ்மதிய்யத் தைச் சார்ந்தவரின் ஒப்பற்ற குறிப்பிடத்தக்க தனித்தன்மை வாய்ந்த சேவைகளை இந்த பார்வையற்ற முல்லாக் களைத் தவிர அறிவுள்ள எவருக் காவது மறுக்க துணிவுள்ளதா? இந்த முல்லாக்களைக் குறித்து பாகிஸ்தான் உச்சநீதி மன்றத்தின் முதன்மை நீதிபதி முனீர் அவர்களுக்கு இவ்வாறு கூற நேர்ந்தது:

**‘‘சவுத்ரி ஸஃபருல்லாகான் அவர்கள் முஸ்லிம்களுக்கு எவ்வித எதிர்பார்ப்புமின்றி தன்னலமற்ற சேவைகளை செய்திருக்கிறார். அவ்வாறிருந்தும் சில ஜமாஅத்துக்கள் நீதிமன்ற விசாரணையில் அவரைப் பற்றி எவ்வாறு பேசியிருக்கின்றார்களென்றால் அது வெட்கக் கேடானதும் நன்றிக் கேட்டிற்கு ஆதாரமு மாகும்’’.(ரிப்போர்ட் தஹ்கீகாத்தீ அதாலத், ஃபஸாதாதே பஞ்சாப் 1953 -பக்கம் 209 பஞ்சாப் அரசு வெளியீடு)**

விசுவாசமுள்ள அஹ்மதிய தொண்டர்களின் எந்தெந்த மைதானங்களின் சேவைகளை குறிப்பிடுவது! இந்த சேவைகள் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் பரவிக்கிடக்கின்றன. ஒருபோதும் அழிக்க முடியாத அளவுக்கு வரலாற்றின் அங்கமாக இவை மாறிவிட்டன. (தொடரும்)

தமிழில் : முஅல்லிம் முஸ்ஸம்மில்

# நாற்பது நபி மொழிகள்

(தொடர் : 3)

ஹதீஸ் எண் 11 :**இஃலினுன்னிகாஹ்**

பொருள் : திருமணத்தை அறிவிப்புடன் செய்யுங்கள்.

விளக்கம் :எல்லா மறைமுக திருமணங்களும் தகாதவையாகும்.

ஹதீஸ் எண் 12 : **அக்ரிமி ஷ் ஷஃர்**

பொருள் : முடிகளுக்கு கண்ணியமளியுங்கள்.

விளக்கம் : (1) முடிகளை சுத்தமாகவும் தூய்மையாகவும் வைத்திருங்கள். சீப்பை பயன்படுத்தி தலைமுடியை வாரி, அழகுபடுத்துங்கள். (2) ஆணுக்கு தாடி மீசை வளர ஆரம்பித்து விட்டால் அவருடன் குழந்தைகளிடம் நடந்து கொள்வது போன்று நடந்து கொள்ளாதீர்கள். (3) நரைத்த முடியுடையவரைக் கண்டால் அவருக்கு கண்ணியமளியுங்கள்.

ஹதீஸ் எண் 13 : **அல் அஃமாலு பில் கவாதீம்**

பொருள் : செயல்கள் அதன் முடிவுகளைப் பொருத்து அமைகின்றன.

விளக்கம் :முடிவு நல்லதாக இருந்தால் செயல்களும் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டன என்று புரிந்து கொள்ளுங்கள். இல்லையென்றால் அவை வீணானவையாகும்.

ஹதீஸ் எண் 14 : **ஊஸீக்கும் பில் ஜார்**

பொருள் : அண்டைவீட்டாருடன் நல்லமுறையில் நடந்துக்கொள்ளுமாறு நான் உங்களுக்கு வலியுறுத்திக் கூறுகிறேன்.

விளக்கம் :நகரத்தில் நாகரிகத்தை உருவாக்குவதற்கும், அமைதியை நிலைநாட்டுவதற்கும் இதுரு மிகச்சிறந்த வழிமுறையாகும்.

ஹதீஸ் எண்.15 : **அக்ரி மூ அவ்லாத(க்)கும்**

பொருள் : உங்கள் குழந்தைகளுக்கு கண்ணியமளியுங்கள்.

விளக்கம் : அப்போதுதான் அவர்களிடம் தன்னம்பிக்கை உருவாகும். தீய விஷயங்களிலிருந்தும் தீயவற்றிலிருந்தும் தப்பித்திருப்பார்கள். குழந்தைகளை எப்பொழுதும் நீதான் உன்னால்தான் என்று கூறுவதும் பொருத்தமற்றதாகும்.

**நபி வழி சந்தா விபரம்**

ஆண்டு சந்தா – ரூபாய் 80/- தனி பிரதி – ரூபாய் 7/-

D.D அல்லது காசோலை மூலம் அனுப்புபவர்கள் K. NASIR AHMED என்ற பெயரில் அனுப்பவும்

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்க: நிர்வாகி – **நபி வழி** **அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன்**

11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி, சென்னை – 600 024. Ph: 2481 7174

# தேவகுமாரன் என்ற இயேசு

(கிறித்தவ அறிஞர்கள் வழங்கும் கருத்துரை)

**அசன் அபூபக்கர்**

இயேசுநாதரைப் பற்றி திருக்குர்ஆன் பல கட்டங்களில் குறிப்பிடுவதை கிறித்தவப் பெருமக்கள் அறிந்திருப்பார்கள். அவர் இஸ்ரவேலர்களுக்காக அனுப்பப்பட்ட ஒரு நபி (தீர்க்கதரிசி) என்றும், அவர் தகப்பனின்றிப் பிறக்குமாறு இறைவன் அருளினான் என்றும், இன்னும் பலவாறாகவும் அத்திருமறையின் வசனங்களிலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம். ஆனால் அவரைக் குறிப்பதற்கு தேவகுமாரன் என்ற சொல்லை திருக்குர்ஆன் ஓரிடத்தில் கூடப் பயன்படுத்தவில்லை. அதற்கு மாறாக தேவனுக்குக் குமாரன் உண்டு என்று கூறுவதை திருக்குர்ஆன் வன்மையாகக் கண்டித்துள்ளது.

'.... நீர் கூறுவீராக. அல்லாஹ் ஒருவனேயாவான். அல்லாஹ் (எந்தத்) தேவையும் அற்றவன். அவன் எவரையும் பெறவில்லை. அவன் எவராலும் பெற்றெடுக் கப்படவுமில்லை...' (திருக்குர்ஆன் 112 : 2-4)

'இதுவே மர்யமுடைய மகன் ஈஸா (பற்றிய உண்மையான நிலை)... ஒரு மகனை உருவாக்கிக் கொள்வதென்பது அல்லாஹ் வுக்குப் பொருத்தமானதன்று. அவன் தூய்மையானவன்... (ஈஸா கூறினார்:) நிச்சயமாக என் இறைவனும் உங்கள் இறைவனும் அல்லாஹ்வே. அவனை (மட்டுமே) வணங்குங்கள்....' (திருக்குர்ஆன் 19 : 35-37) 'அளவற்ற அருளாள(னான இறைவ)ன் தனக்கு ஒரு மகனை உருவாக்கிக் கொண்டான் என்று அவர்கள் கூறுகின்றனர். (நீர் கூறுவீராக) நிச்சயமாக நீங்கள் கொடூரமான ஒன்றைக் கூறுகின்றீர்கள். அதனால் வானங்கள் வெடித்துவிடவும், பூமி பிளந்து விடவும், மலைகள் தூள்தூளாகி வீழ்ந்தும் விடலாம். ஏனெனில் அவர்கள் அளவற்ற அருளாள(னான இறைவ)னுக்கு ஒரு மகனைக் கொண்டிருப் பதென்பது அவனுக்கு முற்றிலும் தேவையற்ற தேயாகும்'. (திருக்குர்ஆன் 19 : 89-93)

இந்நிலையில் இயேசு கிறித்துவைக் குறித்து சுவிசேஷங்களில் தேவகுமாரன் என்ற சொல் பயன் படுத்தப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம். அதற்கு தேவனின் மகன், கடவுளின் பிள்ளை, கர்த்தராகிய தேவனே பெற்றெடுத்த மகன் என்றெல்லாம் பொதுவாக இன்றைய கிறிஸ்தவ உலகு பொருள் கொடுக்கின்றது.

தேவ குமாரன் என்ற சொல்லுக்கு இந்தப் பொருள் சரிதானா? சரியல்லவென்றால் அதன் உண்மையான பொருள்தான் என்ன? தற்காலக் கிறித்தவர்களில் பல கோடி பேர் நம்பி வருகின்ற இந்தப் பொருள் எவ்வாறு புழக்கத்திற்கு வந்தது? என்பன போன்ற வினாக்களுக்கு விடைதேட முனையும் போது, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நியாய உணர்வு கொண்ட கிறித்தவ சமய அறிஞர்கள், சிந்தனையாளர்கள் இயேசு தேவகுமாரன் என்பது நேரடிப் பொருளில் அல்ல என்ற உண்மையை ஒப்புக் கொண்டுள்ளனர் என்பதைக் காணமுடிகின்றது. ஒரு சிலரின் கருத்துக்களை இங்கு சுருக்கமாகத் தருகின்றோம்.

### ரெவரெண்ட் பிரெளன்

முதலில் ரெவரெண்ட் ரேமாண்ட் பிரெளன் என்ற பாதிரியாரை எடுத்துக்கொள்வோம். யூனியன் தியோலாஜிகல் செமினரி என்ற நிறுவனத்தைச் சேர்ந்த இவர், பைபிள் விவகாரங்களில் தனிச்சிறப்பு பெற்ற

பேராசிரியர் ஆவார். தேவகுமாரன் என்ற சொல் வழக்கு இயேசுவின் சிலுவை தண்டனை சம்பவத்திற்குப் பிறகுதான் பழக்கத்திற்கு வந்தது என்பதும், இயேசு தமது வாழ்நாளில் தாம் தேவகுமாரனாய் இருப்பதாக எந்தச் சந்தர்ப்பத்திலும் கூறவில்லை என்பதும் இவரது அழுத்தமான கருத்தாகும். மேலும் அந்தப் பாதிரியார் கூறுவதாவது :

தேவகுமாரன் என்ற சொல்லைத் தமது வாழ்நாளில் இயேசுவோ அவரைப் பின்பற்றிய வேறு யாருமோ ஒருபோதும் பயன்படுத்தியதில்லை. கி.பி. 30/33ல் இயேசுவிடம் நடத்தப்பட்ட விசாரணையின்போது மேசியா என்ற சொல் பயன்படுத்தப்பட்டதைப் போன்று தேவகுமாரன் என்ற சொல் பயன்படுத்தப் பட்டதற்கு ஆதாரமில்லை.

சமீபக் கிழக்கு நாடுகளிலும், கிரேக்க ரோமானியப் பகுதிகளிலும் ஆதிகாலத்தில் நிலவி வந்த பல தெய்வ வணக்க முறைப்படி அரசர் களுக்கும், புகழ் பெற்ற வீரர்களுக்கும் தேவ குமாரர்கள் என்ற பட்டம் சூட்டப் பட்டுள்ளது. ஏனெனில், ஒரு கடவுள் இப்பூலோகத்தில் ஒரு மனிதப் பிறவியுடன் இணைந்ததால்தான் அரசர்களும் மற்றவர் களும் பிறந்தார்கள் என்று பழம் புராணக்கதை களிலும் அக்காலத்திய சொல் வழக்குகளிலும் காணப்படுகின்றது.

இஸ்ரேலிய நாட்டு வழக்கப்படி பார்த்தால், வானவர்களை அதாவது தேவதூதர்களை தேவகுமாரர்கள் என உருவகமாக அழைப் பதைக் காண முடிகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு நாள் தேவ புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது சாத்தானும் அவர்கள் நடுவிலே வந்து நின்றான்'. யோபு 1:6 என பைபிள் கூறுகிறது. இங்கு வானவர்கள் தேவபுத்திரர் (தேவகுமாரர்கள்) என்ற சொல்லால் சுட்டிக்காட்டப்படுவதைக் காண்கிறோம். மேலும் ஆதியாகமம் 6:2, சங்கீதம் 29:1 தானியேல் 3:25 ஆகிய வசனங்களிலும் தேவகுமாரன் என்ற சொல் வானவர்களுக் காகத்தான் பயன்படுத்தப்பட் டுள்ளதை நாம் அறியலாம்.

இஸ்ரவேலைப் பார்த்து தேவன் 'எனது குமாரன்' என்கிறார். (ஓசியா 11:1) இதிலிருந்து இஸ்ரவேல் அனைவரும் தேவகுமாரன் என்ற நேரடிப் பொருளை யாரும் கொடுப்பதில்லை (மேலும் யாத்திராகமம் 4:22, எரேமியா 31:9 பார்க்க) மேலும் பக்தி சிரத்தையுள்ள ஒரு தனிமனிதனை தேவகுமாரன் என்று பைபிள் கூறுவதையும் நாம் காணமுடிகிறது.

தேவகுமாரன், மேசியா ஆகிய இரு தகுதிகளையும் ஒப்பிட்டு ரெவ. பிரௌன் கூறுகையில், கி.பி.30/33ல் இயேசுவின் மீது தேவதூஷண (இறை நிந்தனை) குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது என்றால், அத்தகைய குற்றச்சாட்டுக்கு அடிப்படைக் காரணம் தாவீதின் வம்சாவழியில் தோன்றுவாரென்று எதிர்பார்க் கப்பட்ட மேசியா இயேசுதான் என அவரைப் பின்பற்றியோர் அவரை ஏற்றிப் போற்றியது தான் என்பது சரியல்ல. இயேசு தமக்குத்தாமே தேவகுமாரன் என்ற இந்தப் பட்டத்தைச் சூட்டிக் கொண்டார் என்பதோ அல்லது அவரைப் பின்பற்றியோர் அவருக்கு இந்தப் பட்டத்தைச் சூட்டிவிட்டார்கள் என்பதோ சாத்தியமல்ல.

தேவகுமாரன் என்ற இப்பெயரை இயேசுவோ அவரைப் பின்பற்றியவர்களோ இயேசுவின் காலத்தில் இயேசுவுக்காகப் பயன்படுத்தினார்கள் என்பதை மேலே கூறிய விளக்கம் மறுத்துரைக் கின்றது. அந்தச் சொல் சுவிசேஷங் களில் பிற்காலத்தில் சேர்க்கப் பட்டது என்பது மிகவும் வெளிப்படை. இந்தக் கருத்து உண்மையானால் இயேசுவின் மீது தெய்வீக பண்புகளைச் சுமத்தி, அவரை

தேவகுமாரனாக்குவது தவறானது என்பதும் அச்சொல் ஒரு மரியாதைக்குரிய சொல்லே என்பதும் தெளிவாகி விடுகின்றது. எனவே, சொற்பொருள்படி, இயேசுபிரான் தேவன் பெற்றெடுத்த மகன் என்பதையும் மேலே சொன்ன இம்மேற்கோள் மறுத்துவிடுகிறது.

**பேராசிரியர் ஜான் ஹிக்**

மற்றொரு ஆங்கில அறிஞர் - ஜான் என்ற பேராசிரியர்; இவர் கிளேர்மாண்ட் ஸ்கூல் ஆஃப் கிராஜுவேட் ஸ்டடீஸ் மற்றும் பர்மிங்ஹாம் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிறுவனத்தின் ஃபெல்லோ ஆவார். இப்பேராசிரியர் கிறித்தவக் கோட்பாடுகளை மறுமதிப்பீடு செய்து பல புத்தகங்களை எழுதியுள்ளார். அவற்றுள் ஒன்றான 'தி மெட்டஃபார் ஆஃப் காட் இன்கார்நெட்' (தேவ அவதாரம்) என்ற நூலிலிருந்து நாம் அறிந்து கொள்வதும் இயேசுவின் கடவுள் அவதாரம் பற்றிக் காலாகாலமாக கிறித்தவர்கள் நம்பி வரும் கருத்துக்களை அவர் மறுத்துக் கூறுகிறார். கடவுள் மனிதனாக அவதரித்து உலக மக்களின் பாவங்களுக்காக இறப்பதையும், இந்தக் கொள்கையைப் பிரகடனப் படுத்துவதற்காக ஒரு திருச்சபையை உருவாக்குவதையும் அவர் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்.

'தி மித் ஆஃப் காட் இன்கார்நெட்' என்ற மற்றொரு புத்தகத்தில், தற்காலத்திய பழைமை வாத கிறித்தவர்களிடம் காணப்படும் நம்பிக்கைகள் எவற்றையும் இயேசு தமது காலத்தில் போதிக்கவில்லை என பேரா.ஹிக் அழுத்தமாக வாதிடுகிறார். ஒரே நேரத்தில் இயேசுவை தெய்வமாகவும் மனிதனாகவும் காட்டும் கொள்கையையும் அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை... இயேசு இறைவனின் அவதாரம் என்பது உருவகமாகச் சொல்லப் பட்டதே தவிர சொற்பொருளின்படி அல்ல... இயேசு இறைவனின் உண்மையான பண்புகளை நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.... வரலாற்றுப் பூர்வமான இயேசு, தம்மை தெய்வீகத் தன்மையுடையவராக ஒருபோதும் வாதிட வில்லை. பிற்காலத்திய கிறித்தவர்களே அவரை அந்த நிலைக்கு உயர்த்தி விட்டனர். அவர் தம்மை (பிதாவான) கடவுளாகவோ குமாரனாகிய கடவுளாகவோ ஒருபோதும் கருதியதில்லை. வரலாற்றில் நாம் காணும் இயேசு அவ்வாறு தம்மைக் கருதியிருப்பது சாத்தியமே இல்லை. அத்தகைய கருத்துக் களை, தேவதூஷணமாக (இறை நிந்தனை யாக) கருதி அவர் நிச்சயமாக மறுத்திருப்பார். இதனைக் கீழ்க்கண்ட சுவிசேஷ வசனம் நமக்கத் தெளிவாக உணர்த்துகிறது. '....நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே...' (மார்க்கு 10:18)

இயேசு சொன்னதாகக் கூறப்படும் இவ்வசனம் தம்மையும் தேவனையும் இரு வேறாகப் பிரித்துக்காட்டித் தெளிவுபடுத்தி யுள்ளதை எவரும் எளிதில் புரிந்துகொள்ள முடியும்.

பாலஸ்தீன வரலாற்றை உற்று நோக்கும் போது அங்கு இரு தனித்தனிக் கலாசாரங் களைக் கொண்ட மக்கள் சமுதாயம் இருந்து வந்ததாக நமக்குப் புலனாகின்றது. ஒன்று, யூதக் கலாச்சாரம், மற்றொன்று கிரேக்கக் கலாச்சாரம். பவுல் கிரேக்க மக்களைத் தாம் ஏற்றக் கொண்ட கிறித்தவ மதத்திற்குள் இழுப்பதற்கு எவ்வளவு பேரார்வம் காட்டினார் என்பதை நாம் அறிவோம். அவர்கள் மனநிறைவு கொள்ள வேண்டும் என்பதற்காக, அவர்கள் இயல்பாகக் கொண்டிருந்த அடிப்படை நம்பிக்கைகளில் ஒரு சமரசத்தை உண்டாக்க பவுல் முன்வந்தார். அதாவது அக்காலத்தில் கிரேக்கர்கள் மூன்று கடவுள்களின் மேல் நம்பிக்கை கொண்டிருந் தார்கள். இயேசுவோ ஒரேயொரு இறைவனை வணங்க வேண்டுமென்று போதனை செய்தார்.

கிரேக்க மக்களின் அனுதாபத்தைத்தாம் பெற வேண்டுமென்றால், அவர்களின் முக்கடவுள் கொள்கையில் மாற்றம் செய்யாமல் அதனையே ஒரு கருவியாகப் பயன்படுத்தி, தாம் போதித்த கிறித்தவத்தில் முக்கடவுள் கொள்கையைப் புகுத்தி விட்டார் என்பதை நாம் கண்டு கொள்ள முடியும்.

**பேராசிரியர் மார்கஸ்**

ஓரிகான் ஸ்டேட் பல்கலைக் கழகத்தில் தத்துவத்துறையில் சமயம் மற்றும் கலாச்சாரப் பேராசிரியரான மார்கஸ் ஜே போர்க் என்பார், காலாகாலமாக நம்பப்பட்டு வரும் கிறித்தவ மதக் கோட்பாடுகளுக்குப் புதிய பொருள் தரும் நவீனக் காலத்து அறிஞர்களில் ஒருவராவார். இயேசு ஒரு புதிய நோக்கு என்ற இவரது நூல் 1987ல் பெருமளவில் விற்றுத் தீர்ந்த ஒரு புத்தகமாகும். இவர் தொகுத்துள்ள மற்றொரு புத்தகம், '2000த்தில் இயேசு'. இவர் தமது 'இயேசு ஒரு புதிய நோக்கு என்ற நூலின் இரண்டாம் அதிகாரத்தில் கலிலேயாவைச் சேர்ந்த யூதர் ஒருவர் எவ்வாறு தேவகுமாரனாக உருமாறினார் என்ற கேள்வியை எழுப்பி, தேவகுமாரன் என்ற சொல்லை வரலாற்றுக் கண்கொண்டு ஆராய்ந்தால் அச்சொல் இயேசுவைக் குறித்து உருவகமாகக் கூறப்பட்டுள்ளதை எவரும் எளிதில் புரிந்துகொள்ள முடியும்; ஆனால் அந்தச் சொல்லோ மிக முக்கியமான கிறித்தவக் கோட்பாடாக மாற்றப்பட்டு விட்டது என முடிவுகட்டுகிறார்.

பேராசிரியர். மார்கஸ் மேலும் எழுதுவதாவது ''இயேசுவின் காலத்தில் யூத சமயத்தில் தேவகுமாரன் என்ற இச்சொல்லுக்கு ஏராளமான அர்த்தங்கள் இருந்தன. முடிசூட்டு விழா நாளில் இச்சொல் மன்னரைக் குறிப்பதற்குப் பயன்படும் என எபிரெய பைபிளிலிருந்து அறிந்து கொள்கிறோம். (சங்கீதம் 2:7) இஸ்ரவேலர்களை ஒட்டு மொத்தமாகக் குறிப்பதற்கும் இச்சொல்லைப் பயன்படுத்த முடியும். (ஓசியா 11:1) இயேசுவின் காலத்தை ஒட்டிய ஒரு கட்டத்தில் இந்த உருவகச் சொல், மற்ற யூதர்களைக் குறித்தும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் மேற் சொன்ன யாவரும்-மன்னன், இஸ்ரவேல் மக்கள், இறையடியார் போன்றோர்-இறைவனோடு கொண்டுள்ள உறவின் நெருக்கத்தையே இது காட்டுகின்றது. எனவே இயேசுவை தேவகுமாரன் என்றழைக்கும் போது, இயேசுவுக்கும் தேவனுக்கும் (கடவுளுக்கும்) உள்ள நெருக்கமான உறவையே இச்சொல் நமக்குத் தெளிவாகப் புரிய வைக்கிறது. உறவின் நெருக்கத்தை உணர்த்தும் தேவகுமாரன் என்ற இந்த உவமானம், மத்தேயு லுக்கா சுவிசேஷங்களில் கூறப்படும் இயேசு பிறந்தது பற்றிய கதை களில் உண்மையிலேயே பிதா மகன் என்ற இரத்த உறவைக் குறிக்கும் சொல்லா காலப்போக்கில் மாறிப்போய்விட்டது வேதனைக்குரியது அல்லவா?''

கி.பி.4ஆம் நூற்றாண்டில் கிரேக்கத் தத்துவத்தின் தாக்கத்திற்கு உள்ளாகியிருந்த கிறித்தவ மதக் கோட்பாட்டின்படி பார்க்கையில் இயேசு, 'இறைவன் பெற்றெடுத்த ஒரே தேவன்' என்ற நம்பிக்கை யூதாக் களிடையே பரவலாக ஏற்றுக் கொள்ளப் பட்டு விட்டதற்கான சான்றுகள் அநேகம் தென்படு கின்றன. 'உண்மையான தேவனிடத் திலிருந்து தோன்றிய உண்மையான தேவன்', 'பிதா உருவான அதே பொருளால் உருவானவர்' என்றெல்லாம் யூத மக்கள் மத்தியில் நிலவி வந்த கருத்துக்கள் அவர்களின் உள்ளங்களில் வேரூன்றத் தொடங்கிவிட்டன. இவ்வாறு ஒரு சாதாரண உருவகச் சொல், கிறித்தவ சமயக் கோட்பா டாகவே மாறி விட்டதை அறியும் போது ஏக இறை கொள்கையுடை யோரின் உள்ளம் அஞ்சி நடுங்காமல் இருக்க முடியாது. (தொடரும்)

# வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி

இமாம் மஹ்தியும் வாக்களிக்கப்பட்ட மஸீஹுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் 1886ம் ஆண்டு பஞ்சாபிலுள்ள ஹோஷ்யார்பூரில் 40 நாட்கள் தனிமையில் தங்கி தியானத்தில் ஈடுபட்டார்கள். 1886ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் நாள் தமக்கு ஒரு வாக்களிக்கப்பட்ட மகன் பிறக்கப் போவதாகவும், அவரிடம் காணப்படும் பண்புகளையும் குறித்தும் இறைவனிடமிருந்து முன்னறிவிப்பைப் பெற்றார்கள். அவர்கள் அதனை அன்றே வெளியிட்டார்கள். இமாம் மஹ்தி (அலை) அவர்கள் பெற்ற இறையறிவிப்பின் மொழியாக்கத்தை அப்படியே கீழே தருகிறோம்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்பான முன்னறிவிப்பு : ‘‘நீர் என்னிடம் கேட்டதற்கிணங்க நான் அருளின் ஓர் அடையாளத்தை உமக்குத் தருகின்றேன். நான் உமது மன்றாடல்களை செவியுற்றேன். மேலும் நான் என் அருள்களால் உமது துஆக்களை ஏற்றுக் கொண்டேன். (லூதியானா, ஹோஷ்யார்பூரை நோக்கி நீர் மேற்கொண்ட) உமது பயணத்தை உமக்கு அருளுக்குரியதாக ஆக்கினேன். எனவே ஆற்றல், அருள், இறை நெருக்கம் ஆகிய அடையாளங்கள் உமக்கு அளிக்கப்படுகிறது. அருள், பேரருள் ஆகிய அடையாளங்கள் உமக்கு வழங்கப் படுகிறது. வெற்றி வாகையின் திறவுகோல் உமக்கு கிடைக்கிறது. வெற்றி பெற்றவரே! உம்மீது சாந்தி உண்டாவதாக. வாழ்க்கையை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதற்காகவும், கல்லறைகளில் அமுங்கிக் கிடப்பவர்கள் வெளியில் வருவதற் காகவும் இறைவன் இதை கூறியிருக்கிறான். மேலும் இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பு, அல்லாஹ்வுடைய வார்த்தையின் அந்தஸ்து மக்களுக்கு வெளிப் படுத்துவதற் காகவும், உண்மை தனது எல்லா அருள் களுடனும் வந்துவிடுவதற்காகவும், பொய் தனது அனைத்து தீய சகுனங்களுடனும் வெருண்டோடி விடுவதற்காகவும் இறைவன் இதைக் கூறியுள்ளான்.

மேலும் நான் ஆற்றல் மிக்கவன் எனவும், விரும்புவதை செய்கின்றேன் எனவும் மக்கள் புரிந்து கொள்ளட்டும். நான் உம்முடன் இருக்கிறேன் என அவர்கள் உறுதி கொள்ளட்டும். மேலும் எவர்கள் இறைவனுடைய இருப்பு பற்றி நம்பிக்கை கொள்வதில் லையோ, மேலும் இறைவனுடைய மார்க்கத்தையும், அவனுடைய வேதத்தையும் அவனுடைய தூய தூதர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களையும் மறுத்தல் மற்றும் பொய்ப்படுத்துதல் என்ற பார்வையுடனும் பார்க்கிறார்களோ அவர்களுக்கு ஓர் அடையாளம் கிடைக்க வேண்டும் என்பதற் காகவும், குற்றவாளி களின் வழியை வெளிப் படுத்துவதற்காகவும் இறைவன் இதைக் கூறியுள்ளான்.

எனவே உமக்கு ஒரு நற்செய்தி! கம்பீரமான தூய ஒரு மகன் உமக்கு வழங்கப்படுகிறது. ஒரு தூய குழந்தை உமக்குக் கிடைப்பார். அந்த மகன் உமது வித்திலிருந்தே உமது சந்ததி, வழித் தோன்றலாக இருப்பார். அழகிய, தூய மகன் உமது விருந்தினர் வருகிறார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீர் என்பதுமாகும்.

**National Watch Company**
Opposite to Bus Stand
Somanur, Tiruppur

**Chennai Hardwares**
241, Aroct Road, Chennai 600 026.
Ph : 2473 5373

அவருக்கு பரிசுத்த ஆவி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் அவர் அசுத்தத் திலிருந்து தூயவராக இருப்பார். அவர் அல்லாஹ்வின் ஒளியாவார். வானத்திலிருந்து வரும் அவர் அருளுக்குரியவ ராக இருக்கிறார். அவருடன் அருள் இருக்கிறது. அது அவர் வரும்போது உடன் வரும்.

அவர் கண்ணியத்திற்குரியவராகவும், மகத் துவம் கொண்டவராகவும், செல்வம் உடையவ ராகவும் இருப்பார். அவர் உலகில் வருவார். மேலும் தமது மஸீஹின் ஆவியினாலும் உண்மையின் ஆவியின் அருளினாலும் அதிகமானோரை நோயிலிருந்து தூய்மைப் படுத்துவார். அவர் அல்லாஹ்வின் வார்த்தை யாவார். ஏனெனில் இறைவனுடைய கருணையும் தன்மானமும் அவரை கண்ணியத் திற்குரிய வார்த்தை யுடன் அனுப்பியிருக்கிறது.

அவர் மிகவும் புத்திக் கூர்மை உள்ளவராகவும், நுண்ணிய அறிவுடைய வராகவும் இருப்பார். மேலும் உள்ளத்தால் சகிப்புத்தன்மை கொண்டவராகவும் இருப்பார். மேலும் வெளிப்புறமான, உட்புறமான ஞானங் களால் அவர் நிரப்பப்படுவார். மேலும் அவர் மூன்றை நான்காக்குபவராக இருப்பார். (இதன் பொருள் புரியவில்லை).

திங்கள்கிழமை. வாழ்த்துக்குரிய திங்கள் கிழமை. அவர் ஆரம்பம், முடிவின் தோற்ற மாகவும், உண்மை, உயர்வின் தோற்றமாகவும் இருக்கிறார். அல்லாஹ் வானிலிருந்து இறங்கி வந்தது போன்றிருக்கும். அவருடைய வருகை மிகவும் அருளுக் குரியதாகவும், இறை கம்பீரத்தை வெளிப்படுத்துவதற்குக் காரணமா கவும் அமையும். இறைவன் தன் திருப்தி எனும் நறுமணத்தால் மணம் கமழ வைத்த ஒளி வருகிறார். நாம் அவரிடத்தில் நமது ஆவியை ஊதுவோம். இறைவனின் நிழல் அவர் தலைமீது இருக்கும். அவர் மிக விரைவில் முன்னேறுவார். கைதிகளை விடுவிப்பதற்குக் காரணமாகத் திகழ்வார். மேலும் பூமியின் எல்லைகள் வரை புகழ் பெற்று விளங்குவார். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள்களைப் பெற்றுக் கொள்ளும். பின்னர் அவர் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவார். வகான அம்ரன் மக்ழிய்யா (இது தீர்மானிக்கப்பட்டு விட்ட ஒன்றாகும்)''.

(ஆதாரம் : மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 1 பக்கம் 100)

## மறைவுச் செய்தி

கோட்டார் ஜமாஅத்தைச் சேர்ந்த ஜனாப் M. முஹம்மத் அலி ஜின்னா சாஹிப் கடந்த 31.1.08 அன்று காலமானார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

1983ஆம் ஆண்டு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உண்மை நிலையை உணர்ந்து பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார்கள். மேலும் இவர்கள் கோட்டார் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவராகப் பணி புரிந்துள்ளார்கள். ஜமாஅத்திற்கு வந்த விருந்தினர்களை நன்றாக உபசரித்து வந்தார்கள். இவர்கள் தமக்குப் பின் மனைவியையும், 6 மகன்களையும், 2 மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார். அவர்கள் அனைவருக்கும் நாம் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவர்களின் ஜனாஸா 31.1.08 மாலை தொழப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. இவர்களின் ஜனாஸா காயிப் தொழுகை சென்னை ஜமாஅத்திலும், பிற ஜமாஅத்துகளிலும் நடத்தப்பட்டது. அல்லாஹ் இவர்களுக்கு மக்ஃபிரத்தை வழங்கி, சுவர்க்கத்தில் இடமளிப்பானாக. ஆமீன்.

# காதியான் ஆண்டு மாநாடு - 2007

மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A

அல்லாஹ்வின் அருளால் கடந்த டிசம்பர் மாதம் 29, 30, 31 ஆகிய தேதிகளில் பஞ்சாப் மாநிலத்திலுள்ள காதியானில் 116-வது ஆண்டு மாநாடு சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. இந்த ஆண்டு மாநாடு முதன் முதலில் 1891-ம் ஆண்டு நடைபெற்ற போது 75பேர் கலந்து கொண்டனர். தற்போது ஆயிரக்கணக்கானோர் இந்த ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். இதுவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைக்கு ஓர் ஆதார மாகும். ஏனெனில் ஹஸ்ரத் வாக்களிக் கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆண்டு மாநாட்டைப் பற்றிக் கூறுகிறார்கள்:

''இந்த மாநாட்டை சாதாரண மாநாடுகளைப் போன்று கருதாதீர்கள். இதற்கான அடிக்கல்லை இறைவனே தன் கரங்களால் நாட்டியுள்ளான். மேலும் இதற்காக சமுதாயங்களை அவன் தயார் செய்துள்ளான். அவை கூடிய விரைவில் இதில் வந்து கலந்து கொள்ளும்''.

மேற்கண்ட முன்னறிவிப்பிற்கேற்ப ஆண்டு மாநாட்டில் பல்வேறு மக்கள் வந்து கலந்து கொள்வதை நாம் காண்கிறோம். எனவே ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் இறைவன் புறமிருந்து தோன்றினார்கள் என்பதற் கான பல்வேறு அடையாளங்களுள் இதுவும் ஓர் இறையடையாளமாகும் என்று சொன்னால் அது மிகையாகாது.

மாநாட்டின் முதல் நாள் அதிகாலை தஹஜ்ஜுத் தொழுகை ஜமாஅத்தாக நடைபெற்றது. ஃபஜ்ர் தொழுகைக்குப் பின்னர் தர்ஸுல் குர்ஆன் நடைபெற்றது. மாநாட்டின் முதல் நாளின் முதல் அமர்வு சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் தலைவர் ஜனாப் ஹாஃபிஸ் சாலிஹ் முஹம்மத் அலாதீன் அவர்களின் தலைமையில் நடை பெற்றது. அவர்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கொடியை ஏற்றி வைத்து துஆ செய்து நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்கள். பின்னர் திருக்குர்ஆன் கிராஅத் மற்றும் அதன் மொழியாக்கம் எடுத்துக் கூறப்பட்டது. அடுத்து டாக்டர் ஹாஃபிஸ் சாலிஹ் முஹம்மது அலாதீன் அவர்கள் துவக்கவுரை நிகழ்த்தினார்கள். அதன் பிறகு நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மல்லானா முஹம்மது உமர் சாஹிப் அவர்கள் 'பல்வேறு மார்க்கங்களின் போதனைகளின் ஒளியில் ஓர் இறை கொள்கை' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் தமது உரையில், இந்து வேத நூல்களிலும், பைபிளின் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் திருக்குர்ஆனிலும் ஓர் இறை கொள்கைதான் போதிக்கப்பட்டிருக்கிறது என்பதை திருக்குர்ஆன் வசனங்களின் அடிப்படையிலும் வேத சுலோகங் களின் அடிப்படையிலும் எடுத்துரைத் தார்கள். பின்னர் கூடுதல் நாஸிம் வக்ஃபே ஜதீது மவ்லானா கரீமுத்தீன் சாஹிப் ஷாஹித் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை (மனித உரிமையைக் காத்தல் குறிப்பாக எதிரிகளுடன் அழகிய முறையில் நடந்து கொள்ளுதல்) என்ற தலைப்பில் உரையாற் றினார்கள். அதன்பின், சில அறிமுக சொற்பொழி வுகள் நடைபெற்றன.

இரண்டாம் அமர்வில் கேரளாவின் பொறுப்பு கொள்கை பரப்புநர் மவ்லவி முஹம்மது அய்யூப் சாஹிப் அவர்கள் 'நுவுவ்வத் வழியில் கிலாஃபத் என்ற நபிமொழியின் ஒளியில் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் அருள்கள்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். அதன் பிறகு உரையாற்றிய நாஸிர் ஆலா மவ்லானா முஹம்மது இன்ஆம் கவ்ரி சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக் கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை (இஸ்லாமிய சேவைகள் என்ற ஒளியில்) எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் தமது உரையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்துள்ளபடி இக்காலத்தில் இமாம்

மஹ்தியாகவும், வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் தோன்றிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் இஸ்லாத்திற்காக செய்திருக்கும் அருந்தொண்டுகளை எடுத்துரைத்தார்கள்.

அதன் பிறகு நடைபெற்ற அறிமுக சொற்பொழிவில் இலங்கையில் பணியாற்றும் அஹ்மதிய்யா முஸ்லிம் கொள்கை பரப்புநர் ஜனாப் மவ்லவி அமீர் சாஹிப் அவர்கள் இலங்கையில் அஹ்மதிய்யா ஜமாஅத் பரவிய வரலாற்றைச் சுருக்கமாக எடுத்துரைத்தார்கள். அதன்பிறகு உரையாற்றிய மவ்லவி ஷம்ஸுத்தீன் சாஹிப் அவர்கள் பாலத்தீனத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் பரவி வருவது பற்றியும் நல்லியல்பு கொண்ட பாலத்தீன மக்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து வருவது பற்றியும், இது குறித்து ஏற்கெனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முன்னறிவித் திருந்தார்கள் என்பது பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். இவையெல்லாம், 'நான் உமது பிரசாரத்தை பூமியின் எல்லைவரை எட்ட வைப்பேன்' என இறைவன் ஹஸ்ரத் வாக்களிக் கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அறிவித்த முன்னறிவிப்பு சொல்லுக்கு சொல் நிறைவேறி யிருப்பதை நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

ஜல்ஸாவின் இரண்டாம் நாள் முதல் அமர்வில் மவ்லானா முனீர் அஹ்மத் காதிம் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மை (திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியின் ஒளியில்) என்ற தலைப்பில் உரையாற்றினார்கள். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களின் உண்மைக்கான சான்றுகளை திருக்குர்ஆனிலிருந்தும் நபிமொழி களிலிருந்தும் எடுத்துரைத்தார்கள். அதற்குப்பின் உரையாற்றிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தில்லி பொறுப்பு கொள்கை பரப்புநர் மவ்லானா ஸய்யது கலீமுத்தீன் சாஹிப் அவர்கள் 'இஸ்லாத்தில் பெண்களின் உரிமை' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். அவர்கள் தமது சொற்பொழிவில், இஸ்லாத்திற்கு அரபு நாட்டில் பெண்களுக்கு இருந்த இழிந்த நிலை பற்றியும் வரலாற்றின் ஒளியில் எடுத்துக் கூறி, இஸ்லாம் வந்த பிறகு அது பெண்களுக்கு எத்தகைய உயரிய அந்தஸ்தை வழங்கியுள்ளது என்பதையும் விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். அதன்பிறகு காதியான் ஜாமியா அஹ்மதிய் யாவின் தலைமைப் பேராசிரியர் மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர் சாஹிப் அவர்கள் இறுதி காலத்தைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகள் என்ற தலைப்பில் உரையாற்றினார்கள். அவர்கள் தமது உரையில், கடைசி காலத்தின் அடையாளங்களாக திருக்குர்ஆனில் கூறப்பட்டிருக்கின்ற யாஜூஜ் மாஜூஜ், தாப்பத்துல் அர்ழ் (பிளேக் நோய்க் கிருமி) புகை (அணுகுண்டு) போன்றவை பற்றியும், நபிமொழியில் வந்துள்ள மஸீஹ் தஜ்ஜாலைக் கொல்லுதல் போன்றவற்றை பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

அதன் பிறகு அறிமுக சொற்பொழிவுகள் நடைபெற்றன. பின்னர் சிறிது இடைவேளைக்குப் பிறகு ளுஹர் அஸ்ர் தொழுகை மாநாட்டுத் திடலிலேயே ஜம்வு செய்து தொழப்பட்டன. அதன் பின்னர் இரண்டாம் அமர்வு ஆரம்பமானது. மார்க்கத் தலைவர்களை கண்ணியப்படுத்துதல் என்ற தலைப்பில் நாயிப் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மவ்லானா தன்வீர் அஹ்மத் காதிம் சாஹிப் அவர்கள் பஞ்சாபி மொழியில் உரையாற்றினார்கள். அதன் பின்னர் அறிமுக சொற்பொழிவுகள் நடைபெற்றன.

இந்த ஆண்டு மாநாட்டில் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர். ஹரியானா பிரஸிடெண்ட் ஷேர்வால்ஜீ கலந்து கொண்டார். ஹரியானாவில் அஹ்மதி முஸ்லிம்கள் பள்ளிவாயில் கட்டத் துவங்கியபோது அதற்கு முஸ்லிம்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அப்போது ஷேர் வால்ஜீ அவர்கள் அஹ்மதி முஸ்லிம்களுடன் இணைந்து பள்ளி கட்டினார். ஷேர் வால்ஜீ தமது உரையில், ஹரியானா முதலமைச்சர் வாழ்த்துச் செய்தி தெரிவித்திருப்

பதாகக் கூறினார். மேலும் அவர் பேசுகையில், அஹ்மதிய்யா ஜமாஅத் முழு உலகிலும் சகோதரத்துவத்தை நிலைநாட்டியுள்ளது. வறுமையிலுள்ளவர்களுக்கும், பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மத, இன வேறுபாடின்றி உதவி ஒத்தாசை செய்துள்ளது எனக் கூறி பாராட்டிப் பேசினார். இந்திய நாட்டிலும் சகோதரத்துவத்தை நிலைநாட்ட அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கலீஃபா மிர்ஸா மஸ்ரூர் இங்கு வர வேண்டும் என்று கூறினார்.

தில்லியிலிருந்து கலந்து கொண்ட சீக்கிய பிரமுகர் சுவாமி சுசீல்ஜி பேசுகையில், சர்வ சமய தலைவர்களை மதிக்கும் முஸ்லிம் மாநாட்டில் நான் கலந்து கொள்வது இதுவே முதல் முறை எனக் குறிப்பிட்டார்.

பஞ்சாபிலுள்ள Unity of Man என்ற அமைப் பிலிருந்து வருகை தந்திருந்த பிரதிநிதி உரையாற்றுகையில், எங்கள் அமைப்பின் தலைவர் வர இயலவில்லை. நான் அவரது பிரதிநிதியாக வந்திருக்கிறேன் எனக் குறிப்பிட்டார்.

மாநாட்டின் மூன்றாவது நாள், முதல் அமர்வில் மல்லானா அப்துல் வகீல் அவர்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் பொருளாதார அமைப்பு என்ற தலைப்பில் உரையாற்றினார்கள். அவர்கள் பொருள் தியாகம் பற்றி உரையாற்றும்போது வஸிய்யத் அமைப்பு பற்றியும் அதன் முக்கியத் துவம் பற்றியும் விளக்கிக் கூறினார்கள். அடுத்து உரையாற்றிய மவ்லானா முஹம்மது நஸீம்கான் சாஹிப் அவர்கள், இஸ்லாமிய உலகு சந்தித்து வரும் பிரச்சனைகளும் அவற்றிற்கான தீர்வுகளும் என்பது பற்றி மிக விளக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

மூன்றாம் நாளின் இறுதி அமர்வில் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹுத்த ஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனி லிருந்து ஆற்றிய முடிவுரையை முஸ்லிம் டெலிவிஷன் அஹ்மதிய்யா இன்டர்நேஷனல் (M.T.A.) மூலமாக மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் கேட்டுப் பார்த்து பயனடைந்தனர். மேலும் இது முழு உலகிலும் நேரடி ஒளிபரப்பப்பட்டது. கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தமது உரையில் பல அரிய அறிவுரைகளை வழங்கினார்கள். ஹுஸூர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது இந்திய நேரப்படி சூரியன் மறையும் நேரமாக இருந்தது. ஹுஸூர் அவர்கள், தற்போது காதியானில் சூரியன் மறையும் நேரமாகும். ஆயினும் இஸ்லாம் அஹ்மதிய்யத் உலகத்தில் ஒருபோதும் மறையாது எனக் குறிப்பிட்டார்கள்.

ஹுஸூர் அவர்கள் தமது உரையில் ஈமானை வலுவூட்டும் கருத்துகளைக் கூறும்போது காதியான் மாநாட்டில் நாரே தக்பீர் கூறப்பட்டது. கூடியிருந்தவர்களும், இந்த நிகழ்ச்சியை MTA மூலமாக முழு உலகிலும் பார்த்துக் கொண்டிருந் தவர்களும் அல்லாஹு அக்பர் எனக் கூறினார்கள். அவ்வாறே இலண்டனிலிருந்து நாரே தக்பீர் கூறப்பட்டபோது அதை MTA மூலமாக முழு உலகிலும் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அல்லாஹு அக்பர் எனக் கூறினார்கள். இந் நிகழ்ச்சி ஈமானை வலுவூட்டுவதாக அமைந்தது.

மாநாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழ், மலையாளம், தெலுங்கு, வங்காளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உடனுக்குடன் மொழியாக்கம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். அல்ஹம்து லில்லாஹ்.

**Parveen Enterprises**
Dealers : Papers, Boards &
Binding Materials
Vadapalani, Chennai 600 026.

**M.Rafique & Sons**
Exporters And Agents
U55, 9th St, Anna Nagar, Chennai-40.
Ph : 2628 1531, Fax : 2628 1532

NABI VAZHI    Tamil Monthly February 2008
Registered with the Registrar of News Paper of India at No.TN/TAM/05/15211

# 31வது சென்னை புத்தகக் காட்சியில் அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன் அரங்கு

✦ சென்னை பச்சையப்பன் கல்லூரியின் எதிரில் உள்ள செயின்ட் ஜார்ஜ் ஆங்கிலப் பள்ளி வளாகத்தில் 31வது சென்னைப் புத்தகக் காட்சி கடந்த ஜனவரி 4ஆம் நாள் முதல் 17ஆம் நாள் வரை நடைபெற்றது.

✦ தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் நடத்துகின்ற இப்புத்தகக் காட்சியை இவ்வாண்டு தமிழக முதல்வர் மு. கருணாநிதி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

✦ இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த புத்தக விற்பனையாளர்களும், பதிப்பாளர்களும் இந்த புத்தகக் காட்சியில் அரங்கமைத்து பங்கேற்றனர். 400 அரங்குகளைக் கொண்ட இப்புத்தக் கண்காட்சியில் தினமும் பல்லாயிரக்கணக்கில் மக்கள் வருகை தந்தனர்.

✦ புத்தகக் காட்சியை முன்னிட்டு அங்கு அமையப் பெற்ற விழா அரங்கத்தில் தினமும் மாலை, புத்தக வெளியீட்டு விழாக்களும், சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

**எமது அரங்கு**

✦ இரண்டு அரங்குகளைக் கொண்டு அமையப் பெற்ற எமது அரங்கில் பல்வேறு மொழிகளில் திருக்குர்ஆன் மொழியாக்கங்கள் மற்றும் இஸ்லாமிய நூல்கள் இடம் பெற்றிருந்தன.

✦ தென்னிந்திய மொழிகளில் எமது பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட திருக்குர்ஆன் மொழியாக்கங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. பல்வேறு உலக மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு, வெளியிடப்பட்ட திருக்குர்ஆனின் பிரதிகள் எமது அரங்கில் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.

✦ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு, இயேசு மரித்தது எங்கே? மற்றும் ‘நமது கிருஷ்ணர்’ என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட எமது நூல்கள் அதிகமாக விற்பனையாகின.

இஸ்லாத்தின் கொள்கைகளை எடுத்துக் கூறுகின்ற பல்வேறு பிரசுரங்கள் எமது அரங்கிற்கு வருகை தந்த அனைத்து மதத்தைச் சேர்ந்த மக்களுக்கும் வழங்கப்பட்டன.

இலட்சக்கணக்கில் படித்தவர்கள் வருகை தந்த இப்புத்தகக் காட்சியில் எமது நூல்களையும், பிரசுரங்களையும் பெற்ற பல்லாயிரக்கணக்கான மக்களில் நல்லியல்பு கொண்டவர்களை இறைவன் நேர்வழியின் பக்கம் சேர்ப்பானாக! ஆமீன்.

**-எம். நயீம் அஹ்மத்**

தலைவர், புத்தகக் காட்சிக் குழு, அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன், சென்னை

If undelivered please return to:
முகவரி : நிர்வாகி – நபி வழி
அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன்
11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி, கோடம்பாக்கம்,
சென்னை - 600 024. Ph: 2481 7174

Printed & Published By : **K. NASIR AHMED**, From: No.11, First Main Road, U.I. Colony, Kodambakkam, Chennai-24. Editor : **O.M. Muzzammil Ahmed**. Printed at, Script Printers, Periyar Pathai Choolaimedu, Chennai - 600094.